# பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

# பணிப்பாளர் நாயகத்தினது செயலாற்றுகை அறிக்கை

## ஆண்டு – 2014







# நோக்கக்கூற்று

இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தி நோக்கி இறப்பர் பயிர்ச்செய்கை, கைத்தொழிலை தொழிற்படுத்தல்

# பணிக்கூற்று

இறப்பர் பயிர்ச்செய்கை, கைத்தொழிலின் தரச்சிறப்பு, போதியளவு மேம்பாடு ஆகியனவற்றை நோக்கி சட்ட ஏற்பாடுகளை அமுல்படுத்தல், இறப்பர் பயிர்ச்செய்கைக்கான நிதி உதவி, விவசாய உள்ளீடுகள், பரந்த சேவை அத்துடன் இறப்பர் கைத்தொழிலின் அபிவிருத்தி.

# இலக்கு

- ❖ இறப்பர் பயிர்ச்செய்கை நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.
- ❖ இறப்பர் பயிர்ச்செய்கை நில அளவை அதிகரித்தல்.
- ❖ பாரம்பரியமற்ற பிரதேசங்களுக்கு இறப்பர் பயிர்ச்செய்கையை விரிவாக்குவதன் ஊடாக கிராம மட்டத்தில் வறுமையை குறைத்தல்.
- ❖ முடிவுப் பொருள் உற்பத்தியை ஊக்குவித்தல் மூலம் தொழில் வாய்ப்பினை அதிகரித்தலும் அந்நியச் செலாவணி ஈட்டுலை அதிகரித்தல்.

# முன்னுரை

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் 2010 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இறப்பர் காணி தொகைமதிப்பீட்டில் கிடைத்த தகவலின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த இறப்பர் காணி பயிர்ச்செய்கையின் நில அளவு 134137 ஹெக்டெயர் ஆகும். அந் நிலப்பரப்பில 85100 ஹெக்டெயர் சிறு இறப்பர் தோட்ட பிரிவுக்கும், 49037 ஹெக்டெயர் தோட்டக் கம்பனிக்கும் சொந்தமானது. வருடாந்த மொத்த இறப்பர் உற்பத்தி 98573 மெற்றிக்தொன் ஆவதோடு இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 24% குறைவினைக் காட்டுகின்றது. மொத்த இறப்பர் உற்பத்தியில் 49% சீட் இறப்பர் ஆவதோடு, 28% இறப்பர் பால் உற்பத்தி, 15% கிரேப் இறப்பர் உற்பத்திக்கும் 8% புளோக் இறப்பர் உற்பத்திக்கும் ஒதுக்கப்பட்டது. மொத்த இறப்பர் உற்பத்தியில் 13% ஏற்றுமதி செய்துள்ளதோடு 87% உள்நாட்டு கைத்தொழிலாளர்கள் ஊடாக நுகர்வு செய்யப்பட்டிருந்தது. (பச்சை இறப்பர்)உடன் இறப்பர் ஏற்றமதியின் மொத்தப் பெறுமதி 5916.12 மில்லியன் ரூபாய் ஆகும். பாக்கிஸ்தான், இந்தியா, ஜேர்மனி, மலேசியா மற்றும் யப்பான், ஆகியன இலங்கையின் பச்சை இறப்பரை கொள்வனவு செய்யும் பிரதான நாடுகளாவதோடு அந்நாடுகள் கொள்வனவு செய்த இறப்பரின் அளவு மொத்த ஏற்றமதி அளவில் 54% ஆகும். 2014 ஆம் ஆண்டில் சீட் இறப்பர் கிலோவொன்றின் (1) சராசரி விலை 285.76 ரூபாயாவதோடு அது முன்னைய வருடத்தை விட 24% விலை வீழ்ச்சியாகும்.

அரசின் தலையீட்டின் பிரகாரம் இறப்பர் கைத்தொழிலின் வளர்ச்சியை நோக்கி இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட முடிவுகள் இறப்பர் உற்பத்தியின் முன்னேற்றத்திற்கு அநேகமாக உதவியாக அமைந்துள்ளன. 2014 ஆம் ஆண்டுக்காக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 1098.80 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு 1071.57 மில்லியன் ரூபாய் செலவை ஏற்றுள்ளதோடு 98% சதவீதம் ஆகின்றது. அரச நாற்றுமேடைகளில் ஆண்டின் கன்று உற்பத்தி 2.28 மில்லியன் ஆனதோடு விநியோக அளவு 1.37 மில்லியன் கன்றுகளாகும்.

பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிரை விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொணராகலை, அம்பாந்தோட்டை, அவ்வாறே அம்பாறை, அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களுக்கும், அமைதியான சூழ்நிலையினுள் வடமாகாணத்தை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களிப்பு செய்து வவுனியா மாவட்டத்தில் வவுனியா, நெடுங்கேணி பிரதேசங்களுக்கும், முல்லைதீவு மாவட்டத்தில் ஒட்டுச்சுட்டான் பிரதேசத்தில் புதிய இறப்பர் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு 2011 ம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 2014 ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறப்பர் பயிர்செய்கையின் அபிவிருத்தியின் பொருட்டு அம்பாறை, மொனராகலை, பதுளை, அம்பாந்தோட்டை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் கன்று வெற்றிடங்களை நிரப்புவதற்காக 130955 கன்றுகள் விநியோகிக்கப்பட்டதோடு ஊடுபயிர் செய்கைக்காக 12359 வாழை மற்றும் 51079 அன்னாசிக் கன்றுகளும் வழங்கப்பட்டன.

இதற்காக பலவழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

**ஆர். பீ. பிரேமதாச**

**பணிப்பாளர் நாயகம்**

**இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்**

# நன்றி

2014 ஆம் ஆண்டு திறைசேரியிடமிருந்து பெற்றுத்தரப்பட்ட நிதி அனைத்தையும் முறையான வகையில் செலவிடுவதற்கு இயன்ற மிகவும் சிறப்பான வருடமாகும்.. இந்நிதி முதலீடு செய்வதில் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்தல், மனித வள மேம்பாடு, பௌதிக வள அபிவிருத்தி செய்தல், மனிதவள மேம்பாடு, பௌதிக வள அபிவிருத்தி, அதிக பங்களிப்பு மற்றும் ஈடுபாடு, தொழிலாளர் திருப்தி ஆகிய விடயங்களில் தற்கால வரலாற்றில் உயர்மட்டத்தை அடைந்துள்ளோம். இதற்காக பலவழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

**ஆர் பீ. பிரேமதாச**

**பணிப்பாளர் நாயகம்**

**இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்**

# பொருளடக்கம்


1. அறிமுகம் 1

1.1. வரலாற்றுப் பின்னணி 1-2

1.2. இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய முக்கியமானதும் பெறுமதியானதுமான சட்ட மூலங்கள் 2-3

1.3. இறப்பர் அபிவிருத்தி திணைக்கம் 3-4

1.4. திணைக்களத்தினது நிறுவன அமைப்பு 5

1.5. ஒழுங்கமைப்பு இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் 6

1.6. திணைக்களத்தினது ஆளனி தகவல்கள் 7

2. 2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகை முன்னேற்றம் 8

2.1. இறப்பர் பயிர் மானிய நிகழ்ச்சித்திட்டம் 8

2.2. பயிர் உற்பத்தி 9

2.3. மழைக்கவசத்தினைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் 9

2.4. ஊடுபயிர்செய்கை நிகழ்ச்சித்திட்டம் 9

2.5. பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 10

2.6. பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர்செய்கை 10

2.7. திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 11-12

3. இயற்கை இறப்பர் கைத்தொழில் சார்ந்த தகவல்கள் 2014 13

3.1. இறப்பர் பயிர்நில விஸ்தீரணம் 13

3.2. உற்பத்தி, உற்பத்திச் செலவு 14-16

3.3. உள்நாட்டு இறப்பர் நுகர்வு 17

3.4. மூலப்பொருளாக இயற்கை இறப்பர் ஏற்றுமதி 17-19

3.5. இறப்பர் இறக்குமதி செய்யப்பட்ட அளவு 19-20

3.6. இறப்பர் விலை 20-21

3.7. இறப்பர் வியாபாரிகள் 22

3.8. இறப்பர் மீள் பயிரிடல் / புதிய பயிர் செய்கை மானிய முறைமை 22-23

3.9. "மஹிந்த சிந்தனை " தொலை நோக்கு, அரசின் இடைக்கால பொருளாதார திட்டத்தை அமுல்படுத்தலும் புதிய பயிரிடல் உள்ளடஙங்களாக இறப்பர் பயிரிடலின் முன்னேற்றம் 23-28

3.10. சிறு பெருந்தோட்ட முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 29

3.11. இறப்பர்பயிர் நாற்றுமேடைகள், கன்று விநியோகம். 29-31

3.12. ஊடுபயிர் பயிர்ச்செய்கை 32-33

3.13. மழைக்கவச பாவனையை பிரபல்யப்படுத்தல். 33-34

3.14. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு நிலங்கள் துண்டாடப்படுதலை கட்டுப்படுத்தும் சபையின் நடவடிக்கை 34

| | | |
|---|---|---|
| 3.15. | சர்வதேச நடவடிக்கை | 35 |
| 3.16. | சட்ட நடவடிக்கை | 35-36 |
| 3.17. | மானியம் வழங்குதல். | 37 |
| 3.18. | விஷேட அபிவிருத்தி நிகழச்சித்திட்டம் | 37-39 |
| 3.19. | இணைந்த நிதியம் | 40 |
| 3.20. | செஸ் வரி தொடர்பான நடவடிக்கை | 41-42 |
| 3.21. | மீள் பயிர்ச்செய்கைக்கான ஆலோசனை சபை | 42 |
| 3.22. | உள்ளக கணக்காய்வு நடவடிக்கை | 43 |
| 3.23. | பிரச்சார பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விடயம் | 44 |
| 3.24. | கணனி பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விடயம் | 45 |
| 4. | பிரதேச செயலக முன்னேற்றம் | 46 |
| 4.1. | இறப்பர் புதிய பயிர்ச்செய்கை முன்னேற்றம் | 46 |
| 4.2. | இறப்பர் மீள் பயிர்ச்செய்கை முன்னேற்றம் | 46 |
| 4.3. | ஊடு பயிர் பயிரிடல் முன்னேற்றம் | 47 |
| 4.4. | மழைபாதுகாப்பு கவசத்தை பயன்படுத்தல் | 47 |
| 4.5. | இறப்பர் பால் வெட்டுபவர்களை பயிற்றுவித்தல் | 48 |
| 4.6. | இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான தொழில் பயிற்றுவிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 48 |
| 4.7. | ஒட்டுவைப்பவர்களுக்கான பயிற்றுவிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 49 |
| 5. | ஏனைய நிறுவன சேவைகளை நிறைவேற்றுதல் | 50 |

# 1. அறிமுகம்

மிக நீண்ட காலந்தொடக்கம் இலங்கைக்கு அந்நிய செலாவணியைப் பெற்றுத் தரும் பிரதான பொருளாதார பெருந்தோட்டப் பயிரான இறப்பர் பயிர், இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு சக்தி மிக்க பங்களிப்பினை பெற்றுக் கொடுத்துள்ளது. முக்கியமாக இலங்கையின் பதினான்கு நிர்வாக மாவட்டங்களில் இறப்பர் பயிர்செய்கை பரம்பலடைந்துள்ளதோடு, தற்போது முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, பொலநறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் இறப்பர் பயிர்செய்கை அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டுள்ளது.

## 1.1. வரலாற்றுப் பின்னனி

இறப்பர் பயிர் ஹெவியா பிரயிசியலியன்சிஸ் (Havea brasialiensis) ஆகிய தாவரவியல் பெயரால் இனங்காணப்பட்டது. பிரேசிலில் மழைக்காடுகளில் இயற்கையாக வளர்ந்த இப்பயிர் பெற்றக்கொள்ளப்பட்ட இறப்பர் பால் இதுவரையில் முழு உலகிலேயே பெருந்தொகையான உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்பட்ட இயற்கை இறப்பர் பொருளாக விளங்குகின்றது.

பிரித்தானிய காலானித்துவ ஆட்சி காலத்தில் அதாவது 1876 ம் ஆண்டு ''ஹென்றி விக்ஹெம்'' என்ற ஆங்கிலேயரால் முதன் முதலாக கம்பஹா ஹெனரத்கொட தாவரவியல் பூங்காவில் இறப்பர் கன்று நடப்பட்டதன் மூலம் இலங்கைக்கு இறப்பர் மரம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதற்கு 07 வருடங்களின் பின் ஆரம்பிக்கப்பட்ட இறப்பர் பயிர்ச்செய்கை தெற்காசியா முழுவதும் பரவலடைந்து இறப்பர் உற்பத்தியானது விரைவாக முன்நோக்கிச் சென்றது. அதற்கு முரனான வகையில் இறப்பர் விலை கீழ்நோக்கிச் சென்றதனால் விலையில் ஸ்தீரத்தன்மையை உருவாக்கும் நோக்கத்துடன் 1922ம் ஆண்டில் பிரித்தானியாவால் ''ஸ்டீவன்ஸன் நடவடிக்கை முறை'' அறிமுகம் செய்யப்பட்டது. பங்கு முறைமையிலான உற்பத்தி மற்றும் பயிர்நிலப் பகுதியை வரையறை செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய அந்த நடவடிக்கை முறைமைக்கு இறப்பர் செய்கையாளரினாலேயே ஏற்பட்ட எதிர்ப்பின் காரணமாக அது 1928ம் ஆண்டில் கைவிடப்பட்டது. அதேவேளை மீண்டும் இறப்பர் வழங்கல் அதிகரித்து விலை குறைவடைந்ததன் பின்னர் 1934ல் இறப்பர் கைத்தொழிலுடன் தொடர்புடைய சகல நாடுகளினதும் இணக்கத்துடன் ''International Rubber Regulation Agreement" என்ற ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஸ்டீவன்ஸன் நடைவடிக்கைக்கு சமமான வரையறைகளை உள்ளடக்கிய அவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக, இறப்பர் பயிரிடும் நாடுகளில் இறப்பர் நிர்வாகத்தின் பொருட்டு அரச நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. அதற்கிணங்க ''1934 ஆம் ஆண்டு 06ம் இலக்க கட்டளைச் சட்டம்'' மூலம் இறப்பர் நிர்வாகத் திணைக்களம் அமைக்கப்பட்டது. அத்திணைக்களத்தில் முதல் இறப்பர் நிர்வாகி திரு. பி. சரவனமுத்து ஆவார்.

இறப்பர் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக ''1953ம் ஆண்டு 36 ம் இலக்கம் கொண்ட மீள் இறப்பர் பயிரிடும் மானியச் சட்டம்'' நடைமுறைப்படுத்தப்பட்டது. இறப்பரினை மீண்டும் பயிரிடுவதற்கு வழிவகுக்கும் வகையில் ''1934 ஆம் ஆண்டு 06 ம் இலக்கம் கொண்ட இறப்பர் கட்டுப்பாட்டு கட்டளைச் சட்டம்'' மீள் திருத்தம் செய்யப்பட்டு '' 1956 ஆம் ஆண்டு 11ம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்' அனுமதித்துக் கொள்ளப்பட்டதோடு, அச்சட்டம் மற்றும் '' 1953ஆம் ஆண்டு இலக்க 36ம் இலக்கம் கொண்ட மீண்டும் இறப்பர் பயிரிடும் மானியச் சட்டத்தின் கட்டளைக்கு ஏற்ப இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நடவடிக்கைகள் வழி நடாத்தப்படுகின்றன.

இறப்பர் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் நடவடிக்கைகள் மேலும் விரிவாக்கப்பட்டு 1994 ஆம் ஆண்டில் அதுவரை இயங்கிய இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு மாற்றீடாக அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் அமைக்கப்பட்டது. இதன் பிரகாரம் அதுவரை காணப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக இறப்பர் பயிர்த்துறையின் அபிவிருத்திக்கு உறுதுணை புரிந்த கருத்திட்ட சேவைகள், கன்று உற்பத்தி மற்றும் உர விநியோகம் போன்றவை மிகவும் பரந்த அளவிலான விரிவான சேவைகளை வழங்குவதற்கு இறப்பர்த் திணைக்களத்தினால் இயன்றிருந்தது.

மேலும் இத்திணைக்களத்திற்கு, இறப்பர் கைத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்து, இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனமும், சிறுதோட்ட உரிமையாளருக்கு விற்பனை மற்றும் விஸ்த்தீரன சேவையை பெற்றுக்கொடுப்பதன் மூலம், துருசவிய நிதியத்தால் பங்களிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

## 1.2. இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய முக்கியமானதும் பெறுமதியானதுமான சட்ட மூலங்கள்.

### 1.2.1. 1953 ஆம் ஆண்டின் 36 ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள் பயிரிடல் மானியச் சட்டம்

இச்சட்டத்தின் இறப்பரினை மீண்டும் பயிர் செய்தல், இறப்பரினை புதிதாக பயிரிடல், ஊடுபயிர் செய்கை, தொழிற்சாலைகளை புதுப்பித்தல் மற்றும் முறைமையான கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகளை அமுலாக்குதல். மேலும் இச்சட்டத்தின் 7 வது பிரிவின் கீழ் செஸ் வரி விதிக்கப்பட்டுள்ளது.

1953ம் ஆண்டு 36 ம் இலக்க இறப்பர் மீள நடுகை நிதிச்சட்டத்தின் 7 வது பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி வரியினை அறிவிடுவதற்கு சட்டரீதியான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கிணங்க வெளிநாடுகளுக்கு அனுப்பட்ட அனைத்து இறப்பர் இறாத்தலொன்றுக்கு 10 சதம் ஏற்றுமதி வரியாக அறவீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.2.2. 1956 ஆம் ஆண்டின் 11 ம் இலக்கம் கொண்ட இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்

இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இந்நாட்டிலுள்ள சகல சிறு இறப்பர் நிலையங்கள் மற்றும் இறப்பர் தோட்டங்களின் பயிர்ச்செய்கை, உரிமையாளர்கள், காணியின் பரப்பு ஆகியவை உள்ளடங்கிய அடடவணையொன்றினை நடைமுறைப்படுத்திச் செல்வது இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் யாப்புரீதியான செயற்பாடாகும். இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் இறப்பர் பயிர்செய்கை இடம்பெறுகின்ற 10 ஏக்கருக்கும் அதிகமான (ஹெக்டயார் 4.04 ற்கும் அதிகமான) இறப்பர் பயிர் செய்கை “தோட்டம்” ஆகவும், 10 ஏக்கருக்கு குறைந்த (ஹெக்டயார் 4.04 ற்கும் குறைந்தது) இறப்பர் பயிர் செய்கை “சிறு காணியாகவும்” பொருள் கொள்ளப்படுகிறது.

### 1.2.3. 2006 ஆம் ஆண்டின் 20ம் இலக்க இறப்பர் மீள் பயிர்செய்கை மானியச் (திருத்தப்பட்டது) சட்டம்

2006ஆம் ஆண்டின் 20ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள் பயிரிடும் மானியச் (திருத்தப்பட்டது) சட்டத்திற்கு ஏற்ப தேசிய நுகர்வுக்கு எடுக்கப்படும் பச்சையான இயற்கை இறப்பருக்கும் செயற்கை இறப்பருக்கும் செஸ் வரி அறவிடுவதற்கு ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டின் 01ம் இலக்க செஸ் வரிக் கட்டளையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட இயற்கையான பச்சை இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திக்கே செஸ் வரி அறவிடப்பட்டது.

2007ஆம் ஆண்டின் 01ம் இலக்கம் கொண்ட இயற்கை இறப்பருக்கான செஸ் வரிக் கட்டளை உள்ளடங்கிய 2007 ஆகஸ்ட் 30ம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 1518/18 உடைய அதிவிசேட வர்த்தமாணி பத்திரிகைக்கு இணங்க ஏற்றுமதிக்காக அல்லது தேசிய நுகர்விற்காக உற்பத்தி செய்யப்படும், இயற்கை இறப்பர் சார்ந்த உற்பத்திக்கு தேவையான பச்சை இறப்பர் கிலோகிராம் ஒன்றிற்கு 4/- ரூபா செஸ் வரி அறவிடுவதற்கு தேவையான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு, மேற்கூறிய செஸ் வரியினை அறவிட்டுக் கொள்வதற்கான நேரடி அதிகாரம் காணப்படுகின்றது.

## 1.3. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நிறுவனமான இத்திணைக்களத்தின் தலைமைக் காரியாலயம், இலக்கம் 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு 02 எனும் இடத்தில் நிறுவப்பட்டுள்ளது. தலைமைக் காரியாலயத்தினால் நிர்வாகம், ஒருங்கிணைப்பு, ஸெஸ் வரியினை ஒன்று சேர்த்தல் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. மானியங்களை செலுத்துதல், கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகித்தல், உரத்தினை விநியோகித்தல் மற்றும் ஆலோசனை சேவைகள் முதலான இறப்பர் பயிர்செய்கையின் அபிவிருத்திக்காக மேற்கொளள்ப்படும் சேவைகள் மக்களுக்கு மிகவும் வினைத்திறனான முறையில் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் திணைக்களத்தின் நடவடிக்கைகள் பகிரப்பட்டுள்ளன. அதற்கிணங்க 05 பிரதேச அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்திணைக்களத்தின் நடவடிக்கைகள் பகிரப்பட்டுள்ளதோடு, அதற்கேற்ப 05 பிரதேச அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1. கேகாலை பிரதேச பிரதிப் பணிப்பாளர் அலுவலகம்
   (கேகாலை, குருநாகலை,கண்டி,மாத்தளை மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்காக )

2. களுத்துறை பிரதேச பிரதிப் பணிப்பாளர் காரியாலயம்
   (களுத்துறை மாவட்டத்திற்காக)


3. இரத்தினபுரி பிரதேச பிரதிப் பணிப்பாளர் காரியாலயம்
   (இரத்தினபுரி மற்றும் கொழும்பு மாவட்டங்களுக்காக)

4. காலி பிரதேச பிரதிப் பணிப்பாளர் காரியாலயம்
   (காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்காக)

5. மொனராகலை பிரதேச உதவிப் பணிப்பாளர் காரியாலயம்
   (மொனராகலை, பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்காக)

மேலும் இறப்பர் பயிர் செய்கையின் பொருட்டு சிறந்த ஒட்டுமுறையிலான கன்று உற்பத்திக்காக அரசினால் 08 நாற்றுமேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

1. மீரிகம (கம்பஹா மாவட்டம்)
2. வெளிக்கடைமுள்ள (கம்பஹா மாவட்டம்)
3. ஏகல் ஓய (களுத்துறை மாவட்டம்)
4. குருகொடை (களுத்துறை மாவட்டம்)
5. கரப்பிஞ்சா (இரத்தினபுரி மாவட்டம்)
6. கும்புக்கன (மொனராகலை மாவட்டம்)
7. மித்தெனிய ( அம்பாந்தோட்டை மாவட்டம்)
8. பதியதலாவ (அம்பாறை மாவட்டம்)



குறுகொடை இறப்பர் கன்றுகளின் நாற்றுமேடை




கும்புக்கனை நாற்றுமேடை




கும்புக்கனை இறப்பர் கன்றுகளின் நாற்றுமேடை

## 1.4. திணைக்களத்தின் நிறுவன அமைப்பு



## 1.5. ஒழுங்கமைப்பு இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்



## 1.6. திணைக்களத்தின் பணிமனை விபரங்கள்

| தொ.இ | பதவி | அனுமதிக்கப்பட்ட பணிமனை | தற்போதைய பணிமனை | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம்- இலங்கை.நிர்.சே | 1 | 1 | - |
| 02 | பணிப்பாளர்- இலங்கை.நிர்.சே | 2 | 1 | 1 |
| 03 | பிரதம கணக்காளர்- இலங்கை.நிர்.சே | 1 | 1 | - |
| 04 | பிரதிப் பணிப்பாளர்- இலங்கை.நிர்.சே, உதவிப்பணிப்பாளர்- இலங்கை.நிர்.சே | 16 | 14 | 2 |
| 05 | உதவிப்பணிப்பாளர்- இலங்கை.நிர்.சே | 1 | 1 | - |
| 06 | கணக்காளர்- இலங்கை.நிர்.சே | 6 | 3 | 3 |
| 07 | உதவிப்பணிப்பாளர்-தகவல் தொடர்பாடல் தொழினுட்பம். | 2 | 1 | 1 |
| 08 | உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | - |
| 09 | நிர்வாக அலுவலர் | 4 | 3 | 1 |
| 10 | ஊடக அலுவலர் | 1 | 1 | - |
| 11 | பாதீட்டு உதவியாளர் | 1 | 1 | - |
| 12 | அபிவிருத்தி அலுவலர்/பட்டதாரி உதவியாளர் | 22 | 20 | 2 |
| 13 | நாற்றுமேடை முகாமையாளர் | 7 | 6 | 1 |
| 14 | இறப்பர் அபிவிருத்தி அலுவலர்: விசேட (உயர்வகுப்பு) | 12 | - | 12 |
| 15 | அபிவிருத்தி உதவியாளர் | 05 | 05 | - |
| 16 | கட்டிட பராமரிப்பு அலுவலர் | 1 | 1 | - |
| 17 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 139 | 121 | 18 |
| 18 | தகவல் தொடர்பாடல் தொழினுட்ப உதவியாளர் | 5 | 2 | 3 |
| 19 | எழுதுவினைஞர் | 14 | 14 | - |
| 20 | கணக்காய்வு எழுதுவினைஞர் | 1 | 1 | - |
| 21 | இறப்பர் அபிவிருத்தி அலுவலர் | 182 | 95 | 87 |
| 22 | அலுவலக ஊழியர் சேவை | 28 | 26 | 2 |
| 23 | சாரதி | 36 | 36 | - |
| 24 | லொறி உதவியாளர் | 8 | 8 | - |

**ஆளணியின புள்ளிவிபர அட்டவணை i**

# 2. செயலாற்றுகை முன்னேற்றம் - 2014

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் அபிவிருத்தியை கருத்திட் கொண்டு இத்திணைக்களத்தினால் பின்வரும் குறிப்பிடக்கூடிய விடயங்களை மேற்கொள்ளப்பட்டது.

- இறப்பர் பயிர்செய்கை மானிய நிகழ்ச்சித்திட்டம்
- கன்று உற்பத்தி
- மழைக்கவச பாவனை நிகழ்ச்சித்திட்டம்
- ஊடுபயிர் நிகழ்ச்சித்திட்டம்
- பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

## 2.1. இறப்பர் பயிர் மானிய செயற்திட்டம்

புதிய இறப்பர் பயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாரம்பரியமற்ற பிரதேசங்களில் சிறு தோட்டங்களுக்காக 2014 ஆம் ஆண்டில் 7590 ஹெக்டேயர் பரப்பு இலக்காக இருந்ததோடு அவற்றுள் 1428 ஹெக்டேயர் பரப்பும், மொனராகலை மாவட்டத்தில் 5000 ம் ஹெக்டயார் பரப்பும் இறப்பர் பயிர்செய்கை விசேட நிகழ்ச்சித்திட்டம் (ஐகுயுனு) வெளிநாட்டு நன்கொடை கருத்திட்டம் இவ்வருடத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டதோடு அதனூடாக 110 ஹெ்க்டேயர் பயிரிடப்பட்டன. புதிய இறப்பர் பயிர்செய்கையின் பொருட்டு மானியமாக 213.47 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளன.

இறப்பர் மீள் பயிர்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறு தோட்டங்களின் பொருட்டு 2050 ஹெக்டேயர் இலக்காக இருந்ததோடு 1342.91 ஹெக்டயார் பயிரிடப்பட்டன. பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் 1640 ஹெக்டயார் பரப்பு இலக்காக இருந்ததோடு 753.39 ஹெக்டயார் பயிரிடப்பட்டன. அதற்கிணங்க இறப்பர் மீள் பயிர் செய்கையின் கீழ் பயிரிடப்பட்ட மொத்தக் காணியின் பரப்பு 2096 ஹெக்டயராகும். இறப்பர் மீள்பயிர் செய்கை நிகழ்ச்சித் திட்டத்திற்கு மானியமாக 353.80 மில்லியன் ரூபா செலவிடபப்ட்டுள்ளன.



பால் வெட்டப்படும் இறப்பர் பயிரொன்று – மொனராகலை

## 2.2. கன்று உற்பத்தி

திணைக்களத்தின் மூலம் 08 நாற்றுமேடைகளை உருவாக்கியுள்ளதோடு அதில் 07 நாற்றுமேடைகள் ஊடாக கன்று உற்பத்தி செய்து விநியோகிக்கப்டும்.அம்பாறை மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்டள்ள பதியதலாவ நாற்றுமேடையில் கன்று உற்பத்தி நடவடிக்கை 2015 ஆம் ஆண்டு மேற்கொள்வதற்காகவுள்ளது.

## 2.3. மழைக்கவசத்தினைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

மழைக்கவசத்தினைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறு தோட்டங்களிற்காக 1500 ஹெக்டயார் பரப்பு இலக்காகக் காணப்பட்டதோடு அவற்றுள் 308.88 ஹெக்டயாரிற்கு மழைக்கவசங்கள் பயன்படுத்தப்பட்டன. சிறு தோட்டங்களிற்கு மானியமாக 4.29 மில்லியன் ரூபாவும் பெருந்தோட்டக் கம்பனிகளின் பொருட்டு 5000 ஹெக்டயார் பரப்பும் இலக்காக காணப்பட்டதோடு, அவற்றுள் அதிகமான அக்கறையினால் 4060.47 ஹெக்டயார் பரப்பிற்கு மழைக்கவசத்தைப் பயன்படுத்துவதற்கு மானியமாக 22.48 மில்லியன் ரூபாவும் செலவழிக்கப்பட்டன.



மழைகாப்பிடப்பட்ட இறப்பர் காணியொன்று

## 2.4. ஊடுபயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டம்

முதிர்ச்சியடையாத இறப்பர் பயிர்செய்கையுடன் இறப்பர் பயிர் செய்கையாளர்கள் மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக ஊடு பயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 600 ஹெக்டயார் பரப்பு இலக்காக காணப்பட்டதுடன் அவற்றுள் 364.13 ஹெக்டயார் பரப்பு பயிரிடப்பட்டன. ஊடுபயிர் செய்கை நிகழ்ச்சித்திட்டத்திற்காக மானியமாக 1.33 மில்லியன் ரூபா தொகை செலவழிக்கப்பட்டன.



இறப்பர் பயிருடன் வாழை பயரிடப்பட்ட காணியொன்று



இறப்பர் பயிருடன் அன்னாசி பயரிடப்பட்ட காணியொன்று

## 2.5. பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

பயிற்சி நிகழ்ச்சித்திட்டமாக சாதாரண இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், தொழில் ரீதியாக இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒட்டுச் செய்கையாளருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் என்பன நடாத்தப்பட்டன. இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சதாரணமாக இறப்பர் பால் வெட்டுபவர்ளுக்காக இலக்கு கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 2900 ஆனதோடு அவர்களுள் 2721 நபர்கள் பயிற்சியை பூர்த்தி செய்தார்கள். பால்வெட்டபவர்கள் சாதாரண இறப்பர் பால் வெட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 1.78 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டன. தொழில் ரீதியாக இறப்பர் பால் வெட்டுபவர்களுக்காக இலக்கு கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 330 ஆனதோடு அவர்களுள் 333 நபர்களுக்கு பயிற்சியளிக்கப்படடன. தொழில் ரீதியாக இறப்பர் பால் வெட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2.83 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டன. ஒட்டுமுறை பயிற்சிக்காக இலக்கு கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 270 ஆனதோடு அவர்களுள் 273 நபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஒட்டுமுறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 0.22 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டன. இறப்பர் அபிவிருத்தி அலுவலர்களது வெளிக்கள பயிற்சிக்காக இலக்கின் அளவு 108 ஆவதோடு அதில் 98 பேர் பயிற்சிக்காக கலந்துகொண்டனர். அதற்கான தொகை 0.81 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.



பால்வெட்டுவோருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்


## 2.6. பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர் செயற்திட்டம்

பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர்களை விஸ்தரிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் மொணராகலையில் 235.93 ஹெக்டெயரும் அம்பாறையில் 256.17 ஹெக்டெயரும் பதுளையில் 83.87 ஹெக்டெயரும் வவுனியாவில் 12.14 ஹெக்டெயரும் அனுராதபுரத்தில் 0.4 ஹெக்டெயரும் அம்பாந்தோட்டையில் 5.03 ஹெக்டெயரும் என்றும் பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இவ்வருடம் பயிர்ச்செய்யப்பட்ட முழு நிலப்பரப்பு 593.54 ஹெக்டெயரும் ஆகும்.



பாரம்பரியமற்ற பிரதேசங்களில் உள்ள இறப்பர் காணி

## 2.7. வாழ்வெழுற்சி (திவிநெகும) தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்



**2.7.1.** இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெற்றிடமாகிய கன்றுகளை நடுவதற்காக 100,000 இறப்பர் கன்றுகள் இலக்காக இருந்ததோடு 130,955 கன்றுகள் பாரம்பரியமாக இறப்பர் பயிரடப்படும் பிரதேசங்களிலும் பாரம்பரியமற்ற பிரதேசங்களான வவுனியா, அம்பாறை, பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை, ஆகிய மாவட்டங்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. அதற்காக 5.61 மில்லியன் ரூபா தொகை செலவழிக்கப்பட்டது.

**2.7.2.** முதிர்ச்சியடையாத இறப்பர் பயிர் செய்கைக் காணியில் ஊடு பயிராக பயிரிடுவதற்கு வாழைக்கன்றுகள் மற்றும் அன்னாசிக் கன்றுகள் இலவசமாக பெற்றுக் கொடுக்கபட்டன. இங்கு 12359 வாழைக்கன்றுகளும் 51079 அன்னாசிக் கன்றுகளுமாக மற்றும் மொத்தமாக 63438 கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அதற்காக செலவழிக்கப்பட்ட தொகை 1.73 மில்லியன் ரூபாவாகும்.

**2.7.3.** இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கு 50% மானியஅடிப்படையில் பால்வெட்டும் கத்திகளை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சிக்காக இலக்கு ரெகள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 3230 ம் ஆக இருந்ததோடு பயிற்சியினை நிறைவு செய்த 3027 நபர்களுக்கு பால்வெட்டும் கத்திகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அதற்காக செலவழிக்கப்பட்ட நிதி 0.87 மில்லியன் ரூபாவாகும்.

**2.7.4.** வாழ்வெழுற்சி செயற்திட்டத்தின் கீழ் அரசின் இறப்பர் நாற்றுமேடைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் இவ்வருடத்தில் அமுல்படுத்தப்பட்டத. இதன் கீழ் ஐந்து மாவட்டங்களில் அமைந்த 7 நாற்றுமேடைகளை இனங்கண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. இதற்காக 2.07 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

# 3. இயற்கை இறப்பர் கைத்தொழில் சார்ந்த தகவல்கள் - வருடம் 2014

கடந்த வருடங்கள் சிலவற்றுள் இறப்பர் பயிர்செய்கை காணியின் பரப்பானது அதிகரிப்பை காட்டி நிற்கிறது. 2014ம் ஆண்டில் நாடு முழுவதும் மதிப்பிடப்பட்ட மொத்த இறப்பர்க் காணியின் அளவு 2010ம் ஆண்டில் நிலவிய இறப்பரக்காணிக் கணக்கெடுப்பினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்டுள்ளது.

## 3.1. இறப்பர் பயிர்செய்கை பரப்பின் அளவு

**இறப்பர் பயிர்செய்கை நில அளவு - 2014ஆம் ஆண்டில்**

| | தனியார் துறை (20 ஹெக்டயாருக்கும் குறைந்த நிலம்) ஹெக் | பிரதேச பெருந்தோட்டக் கம்பனி (20 ஹெக்டயாருக்கும் கூடுதலான இடம்) ஹெக் | மொத்தம் ஹெக் |
|---|---|---|---|
| 2010ம் ஆண்டில் இறப்பர் காணி கணக்கெடுப்பில் அறிக்கையிடப்பட்ட காணியின் அளவு | 79,395 | 46,250 | 125,645 |
| 2011ம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காணியின் அளவு | 80,018 | 48,516 | 128,534 |
| 2012 ம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காணியின் அளவு | 82,170 | 48,610 | 130,780 |
| 2013 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காணியின் அளவு | 85,083 | 48,585 | 133,668 |
| 2014 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காணியின் அளவு | 85,100 | 49,037 | 134,137 |

**புள்ளிவிபர அட்டவணை ii**

இறப்பர் பயிர் செய்கை இடம்பெறும் நில அளவில் 63.44% சிறிய மற்றும் நடுத்தர அளவிலான துண்டுகள் அடிப்படையிலும், எஞ்சிய 36.56% அளவு பெருந்தோட்டக் கம்பனித் தோட்டங்களாகவும் இருக்கின்றன. இப்பயிர் நில அளவில் முதிர்ச்சியடையாத பயிருள்ள காணியின் அளவு 23,237 ஹெக்டயராகவும், பால் வெட்டுகின்ற முதிர்ச்சியடைந்த காணியின் அளவு 110,900 ஹெக்டயராகவும் மதிப்பிடப்பட்டுள்ளதோடு, அப்பயிர் செய்கையிலிருந்து பெற்றுக் கொண்ட மொத்த உற்பத்தியின் அளவு 98,573 மெட்றிக் தொன்னாகும். 2014ம் வருடத்தில் ஒரு ஹெக்டயாரிலிருந்து பெற்றுக் கொண்ட வருடாந்த அறுவடை காய்ந்த இறப்பர் 889 கிலோகிராமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

சிறு தோட்ட பிரிவின் 85,100 ஹெக்டெயர் முதிர்ச்சியடைபயிர் நில அளவு 74,650 ஹெக்டேயரும் முதிர்ச்சியடையாத பயிர் 10,450 ஹெக்டேயரும் பெருந்தோட்டக் கம்பனிகளில் 49,037 ஹெக்டேயரும் முதிர்ச்சியடைந்த பயிர் நில அளவு 36,247 ஹெக்டேயரும் முதிர்ச்சியடையாத பயிர் 12,790 ஹெக்டேயருமாக காணகப்படுகின்றது.

## 3.2. உற்பத்தி மற்றும் உற்பத்திச் செலவு

### 3.2.1. இறப்பர் உற்பத்தி

2014 ஆம் வருடத்தின் மொத்த இறப்பர் உற்பத்தி 98,573 மெட்றிக்தொன்னாகும். இது கடந்த வருடத்தின் மொத்த உற்பத்தியான 130,421 மெட்றிக்தொன்னுடன் அளவிடும் போது 31,848 கிலோகிராம் குறைவினை காட்டுகின்றது. இது கடந்த வருடத்துடன் ஒப்பீட்டு ரீதியில் 24.42% குறைவினைக் காட்டுகிறது. இவ்வாறு உற்பத்தி குறைவிற்கு தாக்கம் செலுத்திய முக்கிய காரணி 2013 ஆம் ஆணடிற்கு ஒப்பீடாக இறப்பரின் விலை வீழ்ச்சியும் அதிக மழைவீழ்ச்சியையும் காணப்பட்டமையேயாகும். 2014 ஆம் ஆண்டு சிறு தோட்ட பிரிவின் உற்பத்தியாக 76,073 மெற்றிக்தொன் ஆவதோடு பெருந்தோட்டக் கம்பனிகளில் உற்பத்தி 22,500 மெற்றிக் தொன்னாகும்.

**2013 – 2014 ஆண்டுகளின் மொத்த இறப்பர் உற்பத்தி (மெட்றிக்டொன்)**

| ஆண்டு | சீட் இறப்பர் | ஸ்கிரேப் கிரேப் | சோல் கிரேப் | லெடெக்ஸ் கிரேப் | புலோக் இறப்பர் T.S.R | லெடெக்ஸ் மற்றும் ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2013 | 62,800 | 2,379 | 2,440 | 15,373 | 9,566 | 37,863 | 130,421 |
| 2014 | 48,539 | 1,022 | 2,410 | 11,832 | 7,615 | 27,155 | 98,573 |

**புள்ளிவிபர அட்டவணை iii**



**சீட் இறப்பர் உற்பத்தி**



**கிரேப் இறப்பர் உற்பத்தி**

**2014 ஆண்டு மாவட்ட ரீதியில் இறப்பர் உற்பத்தி**

| மாவட்டம் | மாவட்ட உற்பத்தி மெ.தொ. | தேசிய உற்பத்திகது மாவட்ட ரீதியிலான பங்களிப்பு % |
|---|---|---|
| களுத்துறை | 23,894.90 | 24.24 |
| கேகாலை | 30,076.58 | 30.51 |
| கம்பஹா | 3,162.75 | 3.21 |
| குருநாகலை | 2,259.12 | 2.29 |
| கண்டி | 1,538.80 | 1.56 |
| மாத்தளை | 1,051.44 | 1.07 |
| இரத்தினபுரி | 20,653.37 | 20.95 |
| காலி | 5,131.98 | 5.21 |
| மாத்தறை | 3,512.81 | 3.56 |
| அம்பாந்தோட்டை | 67.42 | 0.07 |
| கொழும்பு | 5,299.75 | 5.38 |
| மொனராகலை | 1,057.24 | 1.07 |
| பதுளை | 856.79 | 0.87 |
| புத்தளம் | 10.06 | 0.01 |
| **மொத்தம்** | **98,573.01** | **100.00** |

**புள்ளிவிபர அட்டவணை iv**

### 3.2.2. உற்பத்திச் செலவு

ஒரு கிலோ உலர்ந்த இறப்பரின் உற்பத்திக்காக 2014 ஆம் வருடத்தில் தனியார் துறையினரின் சாதாரண உற்பத்திச் செலவு ரூபா: 160.00 ஆகும். இது கடந்த வருட உற்பத்திச் செலவு ரூபா: 150.00 ஆகும். தோட்ட கம்பனிகளுக்காக 2014 ஆம் ஆண்டின் உற்பத்தி செலவாக ரூபாய் 280.00 ஆவதோடு கடந்த வருடத்தில் அப்பெறுமதி ரூபாய் 245.00 ஆகும். மகசூல் குறைவடைந்தமையால் உற்பத்தி செலவு அதிகரிக்கப்பட வேண்டும் உற்பத்தி செலவானது 2002 ம் ஆண்டு தொடக்கம் அதிகரித்துச் செல்லகின்ற முறையினைக் புள்ளிவிபர அட்டவணை v காட்டுகின்றது.


**இறப்பர் உற்பத்திச் செலவு**

*( 01 கி.கிராம் 1/ ரூபா)*

| ஆண்டு | பெருந்தோட்டக் கம்பனி | தனியார் துறை |
|---|---|---|
| 2002 | 55.74 | 54.00 |
| 2003 | 59.76 | 63.30 |
| 2004 | 65.98 | 73.37 |
| 2005 | 72.56 | 77.37 |
| 2006 | 87.65 | 97.20 |
| 2007 | 102.31 | 112.69 |
| 2008 | 119.89 | 114.00 |
| 2009 | 135.83 | 118.56 |
| 2010 | 158.94 | 119.83 |
| 2011 | 188.23 | 129.56 |
| 2012 | 207.00 | 136.00 |
| 2013 | 245.00 | 150.00 |
| 2014 | 280.00 | 160.00 |

**புள்ளிவிபர அட்டவணை V**

**இறப்பர் உற்பத்திச் செலவு 2002-2014**



### 3.3. உள்நாட்டு இறப்பர் நுகர்வு

இந்நாட்டில் உற்பத்திச் செய்யப்பட்ட இயற்கை இறப்பர் கடந்த காலங்களில் முக்கியமாக ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பெறுமதியான தொழில்நுட்ப மூலப்பொருளாக இருந்ததோடு, தற்போது இந்நிலைமை மாற்றமடைந்து உள்நாட்டு முடிவுப் பொருள் உற்பத்திக்காக அதிகமான அளவில் இறப்பரினை பயன்படுத்தும் தன்மையினை காண முடியும். அதற்கிணங்க 2014 ஆண்டில் இயற்கை இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 85632 மெட்றிக் டொன்னாகும். இந்த அளவு 2014ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த இறப்பர் 98573 மெட்றிக் டொன்னில் 86.87% ஆகும். இந்த வருடத்தில் இறப்பர் உற்பத்தி கடந்த வருடத்தை விட குறைந்து காணப்படுவதோடு கடந்த வருடத்தில் இறப்பர் தொகையில் தேசிய நுகர்வு மற்றும் ஏற்றுமதிக்காக இவ்வாண்டில் பயன்படுத்தப்பட்டள்ளது. இவ் வருடத்தில் இறக்குமதி செய்யப்பட்ட இறப்பர் அளவு 29255.06 மெற்றிக்தொன் ஆகும். இவ்வளவு தேசிய இறப்பர் நுகர்வுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.


### 3.4. மூலப் பொருட்களாக இயற்கை இறப்பர் ஏற்றுமதி

கடந்த 2013 ஆம் ஆணடுடன் ஒப்பிடுகையில் 2014 ஆண்டில் இலங்கையில் இறப்பர் எற்றுமதியில் சுட்டிக்காட்டத்தக்கவாறு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

**2013 - 2014 ஆண்டுகளில் இலங்கையில் இறப்பர் எற்றுமதி செய்யப்பட்ட இறப்பர அளவுகள்**

| மாதம் | கப்பலில் ஏற்றிய அளவு **(மெட்றிக் டொன்)** | |
|---|---|---|
| | 2013 ஆம் ஆண்டு | 2014 ஆம் ஆண்டு |
| ஜனவரி | 2,606 | 3,023 |
| பெப்ரவரி | 2,535 | 2,141 |
| மார்ச் | 2,373 | 1,808 |
| ஏப்ரல் | 1,793 | 1,613 |
| மே | 1,247 | 1,169 |
| ஜூன் | 1,225 | 1,109 |
| ஜூலை | 1,213 | 915 |
| ஆகஸ்ட் | 1,799 | 1,071 |
| செப்டம்பர் | 1,912 | 895 |
| ஒக்டோபர் | 2,082 | 898 |
| நவம்பர் | 1,937 | 705 |
| டிசம்பர் | 2,864 | 959 |
| **மொத்தம்** | **23,586** | **16,306** |

**புள்ளிவிபர அட்டவணை vi**




**இறப்பர் ஏற்றுமதி 2013-2014**

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டில் இலங்கையில் எற்றுமதி செய்யப்பட்ட இறப்பரின் அளவு வகை அடிப்படையில் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**2013 - 2014 ஆண்டகளில் ஏற்றுமதி செயய்ப்பட்ட இறப்பரின் அளவு வகை அடிப்படையில்**

**(மெற்றிக்தொன்)**

| வருடம் | சீட் இறப்பர் | சோல் கிரேப் | ஸ்கிரேப் கிரேப் | லெடெக்ஸ் கிரேப் | புலோக் இறப்பர் (T.S.R) | லெடெக்ஸ் மற்றும் ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2013 | 4574 | 2022 | 17 | 13171 | 2397 | 1405 | **23586** |
| 2014 | 1967 | 2296 | 17 | 9860 | 913 | 1253 | **16306** |

**புள்ளிவிபர அட்டவணை vii**

மொத்த ஏற்றுமதி இறப்பரில் க.ஏ.செ (F.O.B) பெறுமதி அட்டவணை viii இல் காட்டப்பட்டுள்ளது.

**(ரூபா மில்லியன்)**

| வருடம் | ஏற்றுமதித் தொகை மெட்றிக் டொன் | மொத்தப் பெறுமதி ரூபா மில்லியன் | கிலோ.கிராம் 01ன் பெறுமதி ரூபா சதம் |
|---|---|---|---|
| 2013 | 23586 | 9194“00 | 390“00 |
| 2014 | 16306 | 5916“12 | 362“83 |

**புள்ளிவிபர அட்டவணை viii**

இறப்பர் ஏற்றுமதியானது பிரதானமாக தனியார் துறையினால் மேற்கொள்ளப்படுகிறது. தனியார் துறையில் பதிவுசெய்யப்பட்ட 114 ஏற்றுமதியாளர்கள் இருக்கிறார்கள். அந்த ஏற்றுமதியாளர்கள் 114 பேரும் இத்திணைக்களத்தில் 2014 ஆம் வருடத்திற்காக பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

**இறப்பரினை கொள்வனவு செய்யும் பிரதான நாடுகள் 2014**

**(மெட்றிக் டொன்)**

| நாடு | கொள்வனவு செய்த தொகை | % |
|---|---|---|
| பாக்கிஸ்தான் | 2425 | 15 |
| இந்தியா | 2018 | 12 |
| ஜப்பான் | 1678 | 10 |
| ஜேர்மன் | 1583 | 10 |
| மலேசியா | 1117 | 7 |
| இத்தாலி | 970 | 6 |
| தென் ஆப்பிரிக்கா | 763 | 5 |
| அமெரிக்கா | 711 | 4 |
| சீனா | 699 | 4 |
| ஹோங்கொங் | 256 | 2 |
| ஸ்பெயின் | 159 | 1 |
| ஐரோப்பிய சங்கம | 138 | 1 |
| ஏனைய நாடுகள் | 3789 | 23 |
| **மொத்தம்** | **16306** | **100** |

**புள்ளிவிபர அட்டவணை ix**

## 3.5. இறப்பர் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு - 2014 ஆண்டு

| **மாதம்** | **அளவு (மெற்றிக்தொன்)** |
|---|---|
| ஜனவரி | 540 |
| பெப்ரவரி | 0.06 |
| மார்ச் | 1114 |
| ஏப்ரல் | 1753 |
| மே | 381 |
| ஜுன் | 1860 |
| ஜுலை | 2657 |
| ஆகஸ்ட் | 3510 |
| செப்டம்பர் | 3970 |
| ஒக்டோபர் | 4549 |
| நவம்பர் | 5747 |
| டிசம்பர் | 3144 |
| **மொத்தம்** | 29,225.06 |

**புள்ளிவிபர அட்டவணை x**

**2013 - 2014 ஆண்டகளில் இறக்குமதி செயய்ப்பட்ட இயற்கை இறப்பரின் அளவு வகை அடிப்படையில்**

**(மெற்றிக்தொன்)**

| வருடம் | சீட் இறப்பர் | சோல் கிரேப் | ஸ்கிரேப் கிரேப் | லெடெக்ஸ் கிரேப் | புலோக் இறப்பர் (T.S.R) | லெடெக்ஸ் மற்றும் ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2013 | 7790 | 18 | 17 | 0 | 188 | 1886 | **9899.00** |
| 2014 | 21743 | 0 | 15 | 0 | 208 | 7259.06 | **29,225.06** |

**புள்ளிவிபர அட்டவணை xi**

**மொத்த இறப்பர் இறக்குமதி - 2014**

**(மெற்றிக்தொன்)**

| வகை | இறக்குமதி செய்யப்பட்ட அளவு மெ.தொ. | இறக்குமதி பெறுதி ரூ.மி. |
|---|---|---|
| இயற்கை இறப்பர் | 29225.1 | 7227.7 |
| செயற்கை இறப்பர் | 42359.1 | 10580.1 |
| மறுசிருமைக்கப்பட்ட இறப்பர் | 17369.9 | 1548.9 |
| ஸ்கிரேப் இறப்பர் | 5924.0 | 395.3 |
| தொகுதி இறப்பர் | 4563.1 | 1570.0 |
| முழுமையடையாத முடிவு இறப்பர் | 5995.8 | 865.1 |
| முடிவுப்பொருள் உற்பத்தி | 7080.2 | 5580.1 |
| முடிவுப்பொருள் உற்பத்தி (கணக்கு) | 6013.7 | 9572.8 |

**புள்ளிவிபர அட்டவணை xii**

## 3.6. இறப்பர் விலை

அகில மொத்த தேசிய உற்பத்தியில் மந்தமான வளர்ச்சியால் இயற்கை இறப்பருக்கான கேள்வி குறைவடைந்தமையால் 2011 ஆம் ஆண்டிலிருந்து இறப்பர் விலை குறைந்து காணப்படவதோடு 2013, 2014 ஆண்டுகளில் இறப்பர் விலை பின்வருமாறு.

**இறப்பர் வகைக்கு ஏற்ப சாதாரண விலை**

***(1 கிலோ ரூபா)***

| **வருடம்** | **வருடாந்த சாதாரண விலை** | | |
|---|---|---|---|
| | **சீட் இறப்பர் இலக்கம் 1** | **ஸ்கிரேப் இறப்பர் இலக்கம்.11XBR** | **லேடெக்ஸ் கிரேப் இலக்கம்: 1X** |
| 2013 | 376.78 | 309.04 | 397.33 |
| 2014 | 285.76 | 212.75 | 309.90 |

**புள்ளிவிபர அட்டவணை xiii**

## 2014 ஆண்டின் மாதாந்த இறப்பர் விலை

ரூபாய்

| மாதம் | சீட் இறப்பர் (ஆர்.எஸ்.எஸ்) | | | | | லேடெக்ஸ் கிரேப் | | | | | ஸ்கிரேப் கிரேப் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | IX | 1 | 2 | 3 | 4 | 1XBR | 2XBR | 3XBR | 4 | FB | SKIM |
| ஜனவரி | 321.34 | 316.50 | 275.05 | 283.80 | 275.00 | 348.75 | 340.50 | 322.13 | 297.63 | 273.21 | 256.25 | 252.57 | 237.41 | 227.49 | 214.68 | 205.86 |
| பெப்ரவரி | 294.69 | 284.00 | 278.12 | 272.42 | 274.00 | 320.43 | 314.14 | 281.50 | 270.75 | 256.19 | 243.68 | 233.67 | 214.77 | 209.28 | 197.50 | 197.13 |
| மார்ச் | 301.50 | 292.64 | 286.38 | 282.67 | 270.50 | 305.11 | 298.14 | 266.38 | 249.63 | 241.25 | 232.88 | 222.73 | 213.43 | 207.38 | 194.33 | 206.63 |
| ஏப்ரல் | 281.28 | 280.90 | 281.14 | 273.67 | 263.00 | 300.75 | 290.43 | 259.17 | 226.50 | 215.86 | 212.80 | 203.00 | 197.67 | 192.33 | unq | 198.55 |
| மே | 289.54 | 287.75 | 279.50 | 274.33 | 275.00 | 306.50 | 299.50 | 269.86 | 215.86 | 196.94 | 193.81 | 188.00 | 198.21 | 190.64 | 179.50 | 193.56 |
| ஜூன் | 313.47 | 305.00 | 290.25 | 278.80 | 262.50 | 322.17 | 314.57 | 263.57 | 230.00 | 219.29 | 212.00 | 207.75 | 209.80 | 199.71 | 188.40 | 198.33 |
| ஜூலை | 289.86 | 279.40 | 268.33 | 259.50 | 272.00 | 326.15 | 315.13 | 274.50 | 235.22 | 219.78 | 212.93 | 206.50 | 206.30 | 198.89 | 191.03 | 197.64 |
| ஆகஸ்ட் | 263.52 | 256.00 | 257.00 | 254.25 | 242.00 | 296.67 | 287.20 | 257.31 | 231.25 | 205.31 | 197.63 | 190.00 | 193.36 | 185.40 | 176.00 | 185.67 |
| செப்டம்பர் | 261.08 | 256.06 | 240.50 | 238.00 | unq | 297.96 | 288.19 | 264.38 | 234.78 | 208.39 | 198.71 | 188.40 | 187.56 | 180.00 | 159.00 | 172.75 |
| ஒக்டோபர் | 286.80 | 276.67 | 265.75 | 256.00 | unq | 292.60 | 287.63 | 268.00 | 244.00 | 205.63 | 199.83 | 195.00 | 192.14 | 184.56 | 177.75 | 173.75 |
| நுவம்பர் | 263.21 | 257.78 | 252.00 | 250.50 | 245.00 | 306.00 | 301.28 | 275.25 | 257.06 | 207.69 | 198.06 | 193.30 | 186.17 | 182.21 | 176.67 | 169.43 |
| டிசம்பர் | 262.83 | 263.25 | 248.00 | 248.50 | 235.00 | 295.70 | 288.00 | 267.25 | 245.13 | 204.50 | 194.43 | 186.67 | 183.64 | 176.86 | 168.67 | 160.75 |
| சாரதண | **285.76** | **279.75** | **268.50** | **264.37** | **262.40** | **309.90** | **302.06** | **272.44** | **244.82** | **221.17** | **212.75** | **205.63** | **201.71** | **194.56** | **183.96** | **188.34** |

## 3.7. இறப்பர் வியாபாரிகள்

இறப்பர் விற்பனைக்காக அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ளல் கட்டாயத்தேவையாக இருப்பதோடு 2014 ஆம் ஆண்டில் இறப்பர் விற்பனையாளர்கள் 1033 பேரிற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோடு புதிய அனுமதிப்பத்திரங்கள் 74 புதிதாக வழங்கப்பட்டுள்ளது. ஆதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் இறப்பர் வியாபாரிகள் 1107 பேர் இத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டள்ளார்கள். மாவட்டம் என்ற ரீதியில் அவ்விற்பனை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட விபரம் பின்வருமாறு.

| மாவட்டம் | புதுப்பிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | புதிதாக விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு | 55 | 02 |
| கம்பஹா | 41 | 06 |
| களுத்துறை | 333 | 17 |
| இரத்தினபுரி | 223 | 12 |
| கேகாலை | 228 | 23 |
| குருநாகலை | 17 | 01 |
| கண்டி | 10 | 02 |
| மாத்தளை | 04 | - |
| காலி | 68 | 06 |
| மாத்தறை | 34 | 05 |
| அம்பாந்தோட்டை | 01 | - |
| மொனராகலை | 18 | - |
| பதுளை | 01 | - |
| மொத்தம் | **1033** | **74** |

**புள்ளிவிபர அட்டவணை XV**

## 3.8. இறப்பர் மீள் பயிரிடல் / புதிய பயிர் செய்கை மானிய முறைமை

மானியமுறைமையின் கீழ் இறப்பர் பயிர் செய்கையினை மீண்டும் அல்லது புதிதாக பயிரிடுவதற்காக 1953ம் ஆண்டின் 36ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள் பயிரிடல் சட்டத்தின் 07ம் பிரிவுக்கு இணங்க அனுமதி பத்திரத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டும். இச்சட்டத்தின்படி அணைத்து இறப்பர் காணிகளும் திணைக்களத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட இறப்பர் காணியில் இருக்கின்ற பயிரானது 20 வயதினை அடைந்ததன் பின்னர் அவ்விடம் முானியமுறைமையின் கீழ் மீண்டும் பயிர் செய்வதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகமை பெறும்.

இறப்பர் பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்ந்தும் ஊக்கக் கொடுப்பனவிற்காக ஹெக்டயார் ஒன்றுக்கு ரூபா: 125,000/- ஆன மீள் பயிர் செய்கை / புதிய பயிர் செய்கை மானியத் தொகை 2011ம் ஆண்டில் பினவருமாறு அதிகரிக்கப்பட்டது.

இறப்பரினை புதிதாக பயிரிடுவதற்காக ஹெக்டயாருக்கு ரூபா: 150,000

இறப்பரினை மீள் பயிரிடுவதற்காக ஹெக்டயாருக்கு ரூபா 175,000

இந்த நன்கொடை 08 தவணைகளில் வழங்கப்படும். தவணை செலுத்தப்படும் முறை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| தவணை | **புதிய பயிர்ச்செய்கை ஹெக்டெயருக்கு (தொகை ரூபாயில்)** | **நாற்றுமேடை பயிர்ச்செய்கை ஹெக்டெயருக்கு (தொகை ரூபாயில்)** |
|---|---|---|
| முதலாம் தவணை (1) | 6,000.00 | 8,000.00 |
| இரண்டாம் தவணை (2) | 36,000.00 | 43,000.00 |
| மூன்றாம் தவணை (3) | 12,000.00 | 15,000.00 |
| நான்காம் தவணை (4) | 18,000.00 | 21,000.00 |
| ஐந்தாம் தவணை (5) | 18,000.00 | 21,000.00 |
| ஆறாம் தவணை (6) | 18,000.00 | 21,000.00 |
| ஏழாம் தவணை (7) | 19,000.00 | 22,000.00 |
| எட்டாம் தவணை (8) | 23,000.00 | 24,000.00 |
| **மொத்தம்** | **150,000.00** | **175,000.00** |

**புள்ளிவிபர அட்டவணை xvi**

## 3.9. 'மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கு மற்றும் அரச மத்தியகால பொருளாதார திட்டமிடல் நடைமுறைப்படுத்தல் மற்றும் புதிய பயிரிடல் உள்ளிட்ட இறப்பர் பயிர்ச்செய்கையின் முன்னேற்றம்."

'மகிந்த சிந்தனை பயிர்ச்செய்கைக்கோர் உதயம்' நிகழ்ச்சியின் கீழ் இறப்பர் அபிவிருத்தியை கருத்திற்கொண்டு இறப்பர் அபிவிருத்தி அமைச்சின் ஊடாக செய்யப்பட்டவை பின்வருமாறு அமைகின்றது. அதற்றிணங்க இந்நாட்டின் இறப்பர் கைத்தொழிலை சக்தி வாய்ந்த பொருளாதார கருத்திட்டமாக நடாத்திச் செல்வதற்காக வயதான, காலம் கடந்த மற்றும் பொருளாதார ரீதியாக உற்பத்தித் திறனற்ற இறப்பர் பயிரினை நீக்கி அவ்விடத்தில் மீண்டும் பயிர்செய்தல் வேண்டும். உற்பத்தித்திறன் வாய்ந்த பயிர்செய்கையினை நடாத்திச் செல்வதற்காக மொத்த இறப்பர் நிலக் காணியில் 3% ல் ஆவது வருடாந்தம் மீண்டும் பயிர் செய்யப்படுதல் வேண்டும். அந்நில அளவு அன்னளவாக 4000 ஹெக்டயராகும். 2014 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட மீள் பயிர்/ புதிதாக பயிர் செய்யும் இறப்பர் காணியின் அளவு 11280 ஹெக்டயராகும். 2014 ஆம் ஆண்டில் மீள் பயிர் செய்வதற்காக எதிர்பார்த்த நிலத்தின் அளவு தனியார் துறையில் 2050 ஹெக்டயராகவும் மற்றும் அரச தோட்டத் துறையில் 1640 ஹெக்டயராகவும் 3690 ஹெக்டயராகும். வருடத்தினுள் எதிர்பார்த்த புதிய பயிர் செய்கையின் அளவு தனியார் தறையில் சம்பிரதாய

பூர்வமான பிரதேசங்களில் 1920 ஹெக்டயராகவும், சம்பிரதாய பூர்வமற்ற பிரதேசங்களில் 5670 ஹெக்டயராகவும் மொத்தமாக 7590 ஹெக்டயராகும்.

மீள் பயிர் செய்கை மற்றும் புதிய பயிர் செய்கை மாணிய உதவி முறைமையின் கீழ் பயிரிடுதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள், விநியோகித்த அனுமதி பத்திரங்கள் மற்றும் பொருத்தமான முறையில் பயிர் செய்யப்பட்ட காணியின் அளவு புள்ளிவிபர அட்டவணை xii மற்றும் xiii குறிப்பிடப்பட்டுள்ளன.

## இறப்பர் மீள் பயிர் செய்கை மானிய உதவி முறைமையின் கீழ் மீள் பயிரிடப்பட்ட காணியின் அளவு (சிறுதோட்ட உரிமையாளர்கள்) வருடம்-2014

*(ஹெக்டேயார்)*

| மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்ப பத்திரங்கள் | | வியோகிக்கப்பட்ட அனுமதி பத்திரங்கள் | | மீள் பயிர் செய்யப்பட்ட காணியின் அளவு | |
|---|---|---|---|---|---|---|
| | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) |
| களுத்துறை | 925 | 658.24 | 919 | 655.19 | 565 | 386.34 |
| கேகாலை | 1312 | 786.92 | 1081 | 633.66 | 746 | 439.87 |
| கம்பஹா | 184 | 115.22 | 158 | 98.57 | 115 | 76.75 |
| குருநாகலை | 24 | 39.23 | 23 | 38.76 | 07 | 14.38 |
| கண்டி | 46 | 38.77 | 43 | 32.71 | 33 | 19.44 |
| மாத்தளை | 04 | 24.86 | 04 | 24.86 | 03 | 5.66 |
| இரத்தினபுரி | 421 | 281.82 | 499 | 357.36 | 300 | 207.71 |
| காலி | 48 | 37.05 | 38 | 26.42 | 13 | 18.35 |
| மாத்தறை | 44 | 37 | 40 | 30.99 | 21 | 16.04 |
| மொனராகலை | 06 | 8.47 | 05 | 7.67 | 05 | 7.67 |
| பதுளை | 03 | 13.35 | 3 | 13.35 | 3 | 13.35 |
| கொழும்பு | 237 | 155.17 | 238 | 167.56 | 193 | 137.35 |
| **மொத்தம்** | **3254** | **2196.11** | **3051** | **2087.11** | **2004** | **1342.91** |

**புள்ளிவிபர அட்டவணை xvii**

## புதிய இறப்பர் பயிர் செய்கை மானிய உதவி முறைமையின் கீழ் மீள் பயிரிடப்பட்ட காணியின் அளவு (சிறுதோட்ட உரிமையாளர்கள்) வருடம்- 2014

*(ஹெக்டேயார்)*


| மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்ப பத்திரங்கள் | | வியோகிக்கப்பட்ட அனுமதி பத்திரங்கள் | | புதிதாக பயிர் செய்யப்பட்ட காணியின் அளவு | |
|---|---|---|---|---|---|---|
| | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்) |
| களுத்துறை | 337 | 204.31 | 334 | 159.73 | 200 | 98.91 |
| கேகாலை | 1006 | 447.26 | 864 | 343.28 | 579 | 250.55 |
| கம்பஹா | 162 | 87.68 | 123 | 61.7 | 91 | 49.76 |
| குருநாகலை | 149 | 106.44 | 121 | 83.39 | 79 | 56.51 |
| கண்டி | 52 | 25.36 | 51 | 24.79 | 40 | 17.91 |
| மாத்தளை | 14 | 26.18 | 13 | 18.85 | 03 | 6.47 |
| இரத்தினபுரி | 346 | 214.76 | 372 | 243.15 | 271 | 153.41 |
| காலி | 137 | 77.69 | 127 | 69.73 | 45 | 18.07 |
| மாத்தறை | 101 | 66.61 | 99 | 65.26 | 41 | 24.22 |
| அம்பாந்தோட்டை | 63 | 33.07 | 62 | 26.26 | 13 | 5.03 |
| கொழும்பு | 119 | 63.88 | 110 | 60.02 | 81 | 48.63 |
| மொனராகலை | 728 | 490.52 | 719 | 479.52 | 378 | 235.93 |
| பதுளை | 220 | 192.78 | 131 | 128.46 | 78 | 83.87 |
| அம்பாறை | 987 | 1044.35 | 651 | 497.45 | 346 | 256.17 |
| வவுனியா | 03 | 19.02 | 03 | 19.02 | 01 | 12.14 |
| முல்லைத்தீவு | - | - | - | - | - | - |
| அநுராதபுரம் | 43 | 18.6 | 43 | 18.6 | 01 | 0.40 |
| பொலநறுவை | - | - | - | - | - | - |
| **மொத்தம்** | **4467** | **3118.51** | **3823** | **2299.21** | **2247** | **1317.98** |

**புள்ளிவிபர அட்டவணை xviii**

**புதிய இறப்பர் பயிர் செய்கை மானிய உதவி முறைமையின் கீழ் மீள் பயிரிடப்பட்ட காணியின் அளவு (தோட்டத் துறை) 2014**

| பிரதேச செயலகம் | புதிதாக பயிர் செய்யப்பட்ட காணியின் அளவு (ஹெக்) |
|---|---|
| இரத்தினபுரி | 76.03 |
| களுத்துறை | 72.63 |
| கேகாலை | 537.77 |
| காலி | 20.96 |
| மொனராகலை | 46.00 |
| **மொத்தம்** | **753.39** |

**புள்ளிவிபர அட்டவணை xix**



## மீள் பயிரிடப்பட்ட இறப்பர்க் காணியின்அளவு 1990-2014

(ஹெக்டேயர )

| வருடம் | சிறு தோட்டத் துறை | பெருந்தோட் டக் கம்பனி | மொத்தம் |
|---|---|---|---|
| 1990 | 3584 | 1617 | 5201 |
| 1991 | 3507 | 1794 | 5301 |
| 1992 | 2028 | 1889 | 3917 |
| 1993 | 2419 | 2817 | 5236 |
| 1994 | 1623 | 2138 | 3761 |
| 1995 | 1778 | 1461 | 3239 |
| 1996 | 1983 | 1217 | 3200 |
| 1997 | 1172 | 2045 | 3217 |
| 1998 | 1173 | 2542 | 3715 |
| 1999 | 665 | 3866 | 4531 |
| 2000 | 770 | 1853 | 2623 |
| 2001 | 558 | 4584 | 5142 |
| 2002 | 712 | 2066 | 2778 |
| 2003 | 565 | 494 | 1059 |
| 2004 | 819 | 1264 | 2083 |
| 2005 | 1257 | 2329 | 3586 |
| 2006 | 1122 | 2331 | 3453 |
| 2007 | 993 | 4199 | 5192 |
| 2008 | 812 | 5293 | 6105 |
| 2009 | 1002 | 5360 | 6362 |
| 2010 | 1186 | 4755 | 5941 |
| 2011 | 1123 | 1927 | 3050 |
| 2012 | 1117 | 1044 | 2161 |
| 2013 | 1710 | 1007 | 2717 |
| 2014 | 1343 | 753 | 2096 |

**புள்ளிவிபர அட்டவணை XX**

## புதிதாக பயிரிடப்பட்ட இறப்பர் காணியின்அளவு 1990-2014

(ஹெக்டேயர்)

| வருடம் | சிறு தோட்டத் துறை | பெருந்தோட்டக் கம்பனி | மொத்தம் |
|---|---|---|---|
| 1990 | 1039 | 258 | 1297 |
| 1991 | 1602 | 202 | 1804 |
| 1992 | 612 | 302 | 914 |
| 1993 | 907 | 135 | 1042 |
| 1994 | 670 | 37 | 707 |
| 1995 | 651 | 45 | 696 |
| 1996 | 1208 | 35 | 1243 |
| 1997 | 793 | 21 | 814 |
| 1998 | 516 | 17 | 533 |
| 1999 | 223 | 48 | 271 |
| 2000 | 243 | 34 | 277 |
| 2001 | 150 | 14 | 164 |
| 2002 | 227 | 7 | 234 |
| 2003 | 451 | 7 | 458 |
| 2004 | 518 | 5 | 523 |
| 2005 | 1032 | 11 | 1043 |
| 2006 | 1603 | 297 | 1900 |
| 2007 | 1701 | 333 | 2034 |
| 2008 | 2755 | 414 | 3169 |
| 2009 | 1994 | 275 | 2269 |
| 2010 | 2857 | 96 | 2953 |
| 2011 | 2166 | 838 | 3004 |
| 2012 | 2297 | 179 | 2476 |
| 2013 | 2979 | - | 2979 |
| 2014 | 1428 | - | 1428 |

**புள்ளிவிபர அட்டவணை xxi**

## 3.10. சிறிய பெருந்தோட்ட தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட

மொணராகல மாவட்டத்தில் 5000 ஹெக்டயாரில் பயிர்ச்செய்யும் விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் பயிர்ச்செய்கை நடவடிக்கை இவ்வருடத்தில் செயற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க மொணராகல மாவட்டத்தில் பிபிலை, படல்கும்புர, மொணராகலை, மடுல்ல மற்றும் மெதகம போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. அதற்கிணங்க 2014 ஆம் ஆண்டில் 110 ஹெக்டேயாரில் பயிர்ச்செய்யப்படுகின்றது.

அவ் 5000 ஹெக்டெயரிலான பயிர்ச்செய்கை பின்வரும் அட்டவணையில் வருமாறு.

| ஆண்டு | பயிரிடப்பட்ட காணியின்அளவு (ஹெக்டயார்) |
|---|---|
| 2008 | 625 |
| 2009 | 838 |
| 2010 | 1540 |
| 2011 | 709 |
| 2012 | 1113 |
| 2013 | 262 |
| 2014 | 110 |
| **එකතුව** | **5197** |

**புள்ளிவிபர அட்டவணை xxii**

## 3.11. இறப்பர் கன்று நாற்றுமேடையும் கன்று விநியோகமும்

கடந்த காலங்களில் இறப்பர் பயிர்ச்செய்கையால் பயிர்ச்செய்கையாளரின் அக்கறை அதிகரித்துள்ளது. இதனால் இறப்பர் கன்றுகளின் கேள்வி தொடர்ச்சியாக உயர்ந்துள்ளது. இதனால் கன்று உற்பத்திக்கு விசேட கவனத்தை திணைக்களம் செலுத்துகிறது. அதற்காக திணைக்களத்தில் இறப்பர் நாற்றுமேடைகளும் தனியார் இறப்பர் நாற்றுமேடைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


தனியார் இறப்பர்கன்று நாற்று மேடைகள் மற்றும் வர்த்தக இறப்பர்கன்று நாற்று மேடைகளை அமைப்பதற்காக திணைக்களதத்தின் அனுமதி பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஆரம்ப கட்டத்தில் இந்த நாற்று மேடைகளில் உயர் தரத்திலான ஒட்டுக் கிளை நாற்று மேடைகளை அமைப்பதற்காக தேவையான நடுகைப்பொருள் திணைக்களத்தின் நாற்றுமேடைகளிலிருந்து வழங்கப்படும்.

### 3.11.1. அரச நாற்றுமேடை

**அரச நாற்றுமெடைகளின் கன்று உற்பத்தியும் கன்று விநியோகமும் -2014**

| நாற்று மேடையின் பெயர் | நாற்றுமேடைக்குரிய மாவட்டம் | கன்று உற்பத்தி | கன்று விநியோகம் |
|---|---|---|---|
| கரப்பிஞ்சா | இரத்தினபுரி | 123,108 | 89,447 |
| மீரிகம | கம்பஹா | 322,521 | 230,548 |
| வெலிகடமுல்ல | கம்பஹா | 478,446 | 367,273 |
| ஏகல்ஓய | களுத்துறை | 412,993 | 220,100 |
| கும்புக்கன | மொணராகலை | 497,749 | 305,409 |
| குருகொடை | களுத்துறை | 315,449 | 90,059 |
| மித்தெனிய | அம்பாந்தோட்டை | 132,475 | 65,038 |
| **மொத்தம்** | | 2,282,741 | 1,367,874 |

**புள்ளிவிபர அட்டவணை xxiii**




திணைக்கள நாற்று மேடைகளில் 2014 ஆம் ஆண்டில எதிர்பார்த்த கன்று உற்பத்தி 2.45 மில்லியனாகும். ஆண்டின் மொத்த கன்ற உற்பத்தி 2.28 மில்லியனாவதோடு ஆண்டில் விநியோகிக்ககூடியதானது 1.37 மில்லியன் கன்றுகள் மாத்திரமேயாகும். இத்திணைக்களத்தினால் புதிய இறப்பர் நாற்று மேடையொன்றை அம்பாறை மாவட்டத்தில் பதியதலாவையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரையில் நாற்றுமேடைகளில் உட்கட்ட வசதிகள் அபிவிருத்தி செய்தவாறு காணப்படுகின்றது. வரும் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் நாற்றுமேடையில் ஒட்டு இறப்பர் கன்று உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3.11.2. தனியார் மற்றும் வர்த்தக நாற்றுமேடைக்கான அனுமதிப் பத்திரம்

உயர்தரத்து ஒட்டுமுறை இறப்பர் கன்றுகளை பயிர்செய்கையாளருக்கு பெற்றுக் கொடுப்பது திணைக்களத்தின் முக்கிய நோக்கமாகும். திணைக்கள நாற்றுமேடைகளில் கன்று உறபத்தி பொக்கினை அதிகரித்தல் கன்றின் பண்பினை மேலும் அதிகரித்தல் மற்றும் நாற்றுமேடை உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கும் நோக்கில் நாற்றுமேடை அபிவிருத்தி நடவடிக்கைகள் பல திணைகக்ளத்தினால் மேற்கொள்ளப்பட்டன. தனியார் துறை நாற்றுமேடைகள் உயர்தர கன்று உற்பத்திக்காக பயன்படத்தவது திணைக்களத்தின் பொறுப்பாகும். சிபாரிசு செய்யப்பட்ட முறைக்கமைய அமைக்கப்பட்டுள்ள நாற்று மேடை தொடர்பாக அனுமதிப் பத்திரத்தை விநியோகித்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட தனியார் நாற்றுமேடை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தினால் அடிக்கடி மேற்பார்வைக்கு உள்ளாவதோடு நாற்று மேடையை பரிந்துரைக்கப்பட்ட நடாத்திச் செல்வதற்கு தேவையான ஆலோசனையும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இக்கன்று நாற்றுமேடை பரிந்துரைக்கப்பட்ட முறைக்கு நடாத்தப்பட்டுச் செல்கிறதா என்ற விடயங்கள் இறப்பர் அபிவிருத்தி அலுவலரினால் மேற்கொள்ளப்படும்.

**கன்று உற்பத்தி ( தனியார் நாற்றுமேடை) 2014**

| பிரதேச செயலக அதிகாரப்பிரிவு | பதிவு செய்யப்பட்ட நாற்றுமேடைகளின் எண்ணிக்கை | கன்று உற்பத்தி | கன்று விநியோகம் |
|---|---|---|---|
| கேகாலை | 51 | 1,345,248 | 604,579 |
| கம்பா | 08 | 106,800 | 38,306 |
| மாத்தளை | 02 | 8,000 | - |
| கண்டி | 01 | - | - |
| களுத்துறை | 30 | 507,636 | 294,280 |
| மொணராகலை | 05 | 362,500 | 121,000 |
| காலி | 07 | 60,560 | 4,800 |
| மாத்தறை | 06 | 50,558 | 17,285 |
| இரத்தினபுரி | 22 | 879,037 | 359,495 |
| கொழும்பு | 08 | 98,700 | 7,150 |
| **மொத்தம்** | **140** | **3,419,039** | **1,446,895** |

**புள்ளிவிபர அட்டவணை xxiv**

## 3.12. ஊடுபயிர் வளர்ப்பு

இறப்பருடன் ஊடுபயிர் பயிரிடும் சிறு நில உரிமையாளர்களுக்காக இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின்படி ஏக்கருக்கு 4000.00 ம் ரூபா மாணிய உதவி வழங்குதல் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் ஊடுபயிர மானியமாக 1.33 மில்லியன் ரூபாய் தொகை செலுத்தப்பட்டது.




**இறப்பருடன் வாழை பயிரிடப்பட்ட விதம்**

2014 **ஆம் ஆண்டில் துணைப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலத்தின் அளவு**

| மாவட்டம் | பயிர்செய்கையின் நிலப் பரப்பு (ஹெக்டயார்) |
|---|---|
| கேகாலை | 77.49 |
| கம்பஹா | 47.49 |
| குருநாகலை | 13.78 |
| கண்டி | 6.00 |
| களுத்துறை | 51.72 |
| இரத்தினபுரி | 9.79 |
| கொழும்பு | 61.57 |
| காலி | 2.21 |
| மாத்தறை | 5.37 |
| அம்பாந்தோட்டை | 21.49 |
| மொனராகலை | 48.81 |
| பதுளை | 18.41 |
| **மொத்தம்** | **364.13** |

**புள்ளிவிபர அட்டவணை XXV**




## 3.13. மழைக்கவச பாவனையை பிரபல்யப்படுத்தல்

முதிர்ந்த இறப்பர் பயிர்ச்செய்கை காணிகளில் விளைச்சலை அதிகரிப்பதற்காக இறப்பர் பயிர்ச்செய்பையாளர்களை மழைக்கவசத்தை பயன்படுத்த ஆர்வமூட்டுவதற்காக அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. வெற்றிகரமாக மழைக்கசவமிட்ட மரம் ஒன்றிற்கு அதற்காக செலவாகும் தொகையில் 50% எனின் 30 ரூபாய் நிவாரணமாகச் செலுத்தப்பட்டுள்ளது

சிறு தோட்டங்கள் மற்றும் பெருந்தோட்டக் கம்பனி தொடர்பாக இதன் கீழ் மானியம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிததிட்டத்தின் முன்னேற்றம் கீழ்வரும் பள்ளிவபர அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**மழைக்கவசத்தைப் பயன்படுத்துதல்**

| துறை | மழைக்கவசம் பயன் படுத்தப்பட்டுள்ள காணியின் அளவு (ஹெக்) | மானியமாக வழங்கப்பட்ட தொகை (ரூ. மி) |
|---|---|---|
| சிறு தோட்டங்கள் | 308.88 | 4.29 |
| பெருந்தோட்டக் கம்பனிகள் | 4060.47 | 22.48 |
| மொத்தம் | **4369.35** | **26.77** |

**புள்ளிவிபர அட்டவணை xxvi**

### 3.13.1. மழைக்காப்பு பயன்பாடு மாவட்ட ரீதியில்

| மாவட்டம் | பெருந்தோட்டக் கம்பனி(ஹெக்) | சிறு தோட்டம் (ஹெக்.) |
|---|---:|---:|
| இரத்தினபுரி | 65.34 | 63.85 |
| கொழும்பு | 103.60 | 65.51 |
| கேகாலை | 2974.80 | 65.59 |
| கம்பா | 29.95 | 11.92 |
| குருநாகலை | 545.95 | - |
| கண்டி | - | 4.65 |
| காலி | 14.23 | 14.79 |
| மாத்தறை | 5.58 | 37.8 |
| அம்பாந்தோட்டை | - | 1.08 |
| களுத்துறை | 321.03 | 43.69 |
| **மோர்ததம்** | **4060.48** | **308.88** |

**புள்ளிவிபர அட்டவணை xxvii**

## 3.14. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு நிலங்கள் துண்டாடப்படுதலை கட்டுப்படுத்தும் சபையின் நடவடிக்கை

1958 ஆம் ஆண்டின் 02ம் இலக்கம் கொண்ட தேயிலை மற்றும் இறப்பர் தோட்டம் (துண்டாடுதலை கட்டுப்படுத்தல்) சட்டத்தின் கீழ் நிலம் துண்டாடப்படுவதை கட்டுப்படுத்தும் சபையொன்று நிறுவப்பட்டுள்ளது. 20 ஹெக்டயாருக்கு கூடுதலான இறப்பர் தோட்டம் அல்லது அதன் பகுதியொன்று துண்டுகளாக பிரிப்பதற்கு அல்லது விற்பதற்கு தேவையேற்படும் பட்சத்தில் இச்சபையின் அனுமதியை பெற்றுக் கொள்ளல் வேண்டும். இங்கு இந்நிறுவனத்தினால் கிடைத்த விண்ணப்பங்கள் தொடர்பாக அவதானமாக மீள்பரிசீலனை செய்து மேற்கூறப்பட்ட சபைக்கு சிபாரிசு அனுப்பப்படும். வருடத்தினுள் அனுப்பப்படும் சிபாரிசின் எண்ணிக்கை ஐந்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இச்சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக கௌரவ அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட நியமனத்தின் அடிப்படையில் ஒப்படைக்கப்படும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

## 3.15. சர்வதேச அமைப்புக்களிலான நடவடிக்கை.

இலங்கையானது சர்வதேச இறப்பர் கல்விக்குழுவில் (IRSG) மற்றும் இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் சங்கத்தில் (ANRPC) அங்கத்துவம் வகிக்கின்றது. அதற்காக ம் ஆண்டில் அங்கத்துவப் பணமாக இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் சங்கத்திற்கு ரூபா **1,010,870** உம், சர்வதேச இறப்பர் கற்றல் குழுவிற்கு ரூபா **5,485,595.61** செலுத்தியுள்ளது.

இந் நிறுவனங்களில் அங்கத்துவம் வகிப்பதனால் அந்நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு நேரடியாக மற்றும் செயற்பாட்டு ரீதியாக பங்குபற்றுவதனூடாக அந்நியோன்யமாக இறப்பர் கைத்தொழிலின் வளர்ச்சிக்கு சாதக நிலையை தோற்றுவிக்கிறது. மேலும், இந்நிறுவனங்களுக்கு தேசிய இறப்பர் விலை, உற்பத்தி மற்றும் விற்பனை தகவல்கள், பயிசெய்கை நிலத்தின் அளவு, துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை உள்ளடங்கிய தேவையான சகல தகவல்களையும் குறித்த நேரத்திற்கு வருடம் முழுவதும் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு அந்நிறுவனத்தின் ஊடாக ஏனைய நாடுகளின் தகவல்களையும் பெற்றுக் கொண்டு குறித்த பிரிவினருக்கிடையில் பகிரப்பட்டுள்ளன.

கடந்த வருடத்தில் இயற்கை இறப்பரை உற்பத்தி செய்யும் நாடுகளின் சங்கத்தின் (ANRPC) வருடாந்த மாநாடு மலேசியாவில் நடைபெற்றது. அதற்காக இலங்கை, இந்தியா, பம்பூச்சியா, தாய்லாந்து, வியட்னாம், பப்புவாநியுகினியா, இந்தோனேசியா, மலேசியா, சீனா போன்ற அங்கத்துவ நகடுகளும் பங்குபற்றியுள்ளன.

இம்மாநாட்டில் எதிர்வரும் ஆண்டுகளுக்கான தலைமைத்துவம் மலேசியாவுக்கு கிடைக்கப்பெற்றது.

## 3.16. சட்ட நடவடிக்கை

இறப்பரின் மீள் பயிர் செய்கைக்காக மானிய சட்டத்தின் கீழ் இறப்பர் பயிரிடும் அனுமதி பத்திரத்தின் அடிப்படையில் நன்கொடை பெற்றுக் கொண்ட சகல விண்ணப்பதாரிகளும் அனைத்து நன்கொடைகளையும் பெற்றுக்கொள்ளும் வரை பயிர்செய்கையினை சிறந்த முறையில் நடாத்திச் செல்வதற்கு மற்றும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிவாண உதவி ஏற்பாடுகளுக்கு உடன்பட்டுள்ளார்கள். அனுமதிபத்திரங்களை வைத்துள்ள அவர்கள் பயிர்செய்கையில் கவனமின்றி இருப்பார்களாயின் மற்றும் இறுதி தவனை நன்கொடையினை பெற்றுக் கொள்ளும் வரை பயிர்செய்கையினை சிறந்த முறையில் பராமரித்துச் செல்லாவிடின் , பயிர்செய்கையினை சிறந்த முறையில் பராமரித்துச் செல்லுமாறு முன்னெச்சரிக்கை செய்தல் அல்லது பெற்றிருக்கும் நன்கொடைகளை திணைக்களத்திற்கு திருப்பி செலுத்துவதற்கு கட்டளையிடப்படும்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் குறித்த சட்டத்திற்கு இணங்க வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் ஆயத்தங்களுக்கு ஏற்ப நன்கொடை பெறும் இடமொன்று இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி அடுத்தவருக்கு உரிமை வழங்கப்பட முடியாது.

இதற்கேற்ப அனுமதி பத்திரத்தின் செல்லுபடியாகும் கால எல்லையை நீடித்து அனுமதிபத்திரகாரருக்கு பயிர்செய்கையினை முழுமையாக்குவதற்கு தேவையான கால எல்லை பெற்றுக்கொடுத்து இறப்பர் மீள்பயிர் செய்கை சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றாத வகையில், வெற்றிகரமாக இறப்பர் பயிர்செய்கையினை நடாத்திச் செல்வதற்கு இயலாமல் போகும் (நன்கொடை பெற்றுக் கொண்ட) இடத்தின் உரிமையாளருக்கு, பெற்றுக்கொண்ட நன்கொடைகளை திருப்பி செலுத்துமாறு அறிவிக்கப்படும். இவ்வாறு திருப்பிச் செலுத்தாத நில உரிமையாளருக்கு இறுதிகட்ட நடவடிக்கையாக வழக்குத் தொடரப்படும்.

**சாத்தியமற்ற பயிர்ச்செய்கைக்காக அறவிடல் - 2014 ஆண்டு**

| மாவட்டம் | அறவீடு செய்யப்பட்ட பயிர்செய்கையாளின் எண்ணிக்கை | இறுதி அறிவித்தல் அனுப்பப்பட்டு அறவீடு செய்யப்பட்ட தொகை ரூபா* | வழக்குத் தொடரப்பட்டு அறவிடப்பட்டத் தொகை ரூபா* |
|---|---:|---:|---:|
| காலி | 20 | 44,702.18 | |
| மாத்தறை | 34 | 70,688.90 | - |
| அம்பாந்தோட்டை | 02 | 9500.00 | |
| கேகாலை | 141 | 704,335.34 | 719,780.14 |
| மொனராகலை | - | - | - |
| கொழும்பு | 7 | 45,339.50 | - |
| இரத்தினபுரி | 18 | 133,888.36 | - |
| களுத்துறை | 111 | 753,750.46 | - |
| **மொத்தம** | **333** | **1,762,204.74** | **719,780.14** |

**புள்ளிவிபர அட்டவணை xxviii**

மேலும், காலநிலை மற்றும் ஏனைய நியாயமான காரணங்களின் அடிப்படையில் தோல்வியடைந்த பயிர்செய்கைளாயர்கள் தொடர்பில் சட்டத்தின் ஒதுக்கீடுகளை நடைமுறைப்படுத்தி ஆலோசனை சபையின் அனுமதியைப் பெற்று மானிய உதவியினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 3.17. மானியம் வழங்குதல்

மதிப்பீட்டிற்கு உள்ளாகும் 2014 ம் வருடத்தினுள் கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு குறித்த பயிருக்கான மானிய தொகையை திணைக்களம் வழங்கியது.

**இறப்பர் பயிர் வளர்ப்பிற்காக மானியம் வழங்குதல்**

| கருத்திட்டம் | செலுத்தப்பட்ட முழுத் தொகை ( ரூ.மி) |
|---|---|
| 2014 மீள்பயிரிடல் மானிய உதவி(தனியார்துறை) | 219.07 |
| 2014 புதிதாக பயிரிடல் மானிய உதவி (தனியார்துறை) | 213.47 |
| 2014 மீள்பயிரிடல் மானிய உதவி (பெருந்தோட்டக் கம்பனி) | 134.73 |
| **மொத்தம்** | **567.27** |

**புள்ளிவிபர அட்டவணை xxix**

## 3.18. விஷேட அபிவிருத்தி நிகழச்சித்திட்டம்

### 3.18.1. அம்பாறை மாவட்டத்தில் இறப்பர் பயிர்செய்கையை பரப்புதல்

2012ம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட ஆலோசனைக்கு ஏற்ப, அம்பாறை மாவட்டத்தில் இறப்பர் பயிர்செய்கையை பரப்புவதற்கு எடுக்கப்பட் தீர்மானத்திற்கு ஏற்ப 10,000 ஹெக்டயார் நிலப்பரப்பில் இறப்பர் பயிரசெய்கையினை மேற்கொள்ள இலக்கு கொள்ளப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப படிமுறையாக 2012 ஆம் ஆண்டில் 550 ஹெக்டயார் நிலப்பரப்பில் இறப்பர் பயிர்செயகை இலக்கு நிலவியதோடு வருட இறுதியில் 137.5 ஹெக்டயார் நிலப்பரப்பில் இறப்பர் பயிர்செய்கை மேற்கொளள்பபட்டது. மாஓயா, பதியதலாவ, உகன முதலான பிரதெுச செயலாளர் பிரிவுகள் 03 ற்கும் பகிரந்து செல்லும் வகையில் இறபப்ர் பயிர் செயகை நிகழ்ச்சித் திட்டங்கள் பரவலடைந்துக் காணப்பட்டது.

இதன் இரண்டாம் கட்டமாக 2013 ஆம் ஆண்டில் 402.93 ஹெக்டேயர் பயிரிடப்பட்டது. ஆதன் மூன்றாம் கட்டமாக 2014 ஆம் ஆண்டில் 256.17 ஹெக்டேயர் பயிரிடப்பட்டது. ஆதற்கிணங்க இன்று வரை 796.60 ஹெக்டேயர் பயிரிடப்பட்டுள்ளது.

### 3.18.2 வடமாகாணத்தில் இறப்பர் பயிர்ச்செய்கையை விஸ்த்தரித்தல்

வடமாகாணத்தில் இறப்பர் பயிர்ச்செய்கையை விஸ்த்தரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 3200 ஹெக்டெயாரில் இறப்பர் பயிர்ச்செய்கை வேலைத்திட்டத்தை வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் விஸ்த்தரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அவ்மாவட்ட மக்களுக்கு சாத்தியமான சேவைளை திட்டமிடுவதற்காக வவுனிய மாவட்டச் செயலாளர்

காரியாலயச் சூழலில் இத்திணைக்கள காரியாலயம் ஒன்று கௌரவ கைத்தொழில் அமைச்சரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரையிலும் வவுனியா மாவட்டத்தில் **19.02** ஹெக்டெயருக்காக அனுமதிபத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் **12.14** ஹெக்டெயரில் இறப்பர் புதிதாக பயிரிடப்பட்டுள்ளது.

### 3.18.3. திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2014

குறைந்த வருமானமுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதோடு, கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தத் தேவையான ஆரம்ப அடிப்படைவசதிகளை பரவலாக்கலும், அவர்களின் கல்வி, சுகாதாரம் போன்ற சமூக அபிவிருத்திக்கு தேவையான சூழலை உருவாக்கலும், கிராமிய மக்களின் சந்தை தேவைகளை மற்றும் தேசிய பொருளாதார பெறுபேற்றை உச்சளவில் பெற்றுக்கொள்ளக்கூடியதான அடிப்படை வசதிகளை தொடர்புபடுத்தலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பொறுப்பேற்கிறது.

இதன் படி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி அனுசரணையோடு நடைமுறைப்படுத்தப்படும் திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இறப்பர் துறையினுள 2014 2013ம் ஆண்டில் நடைமுறைக்கு உள்ளாகியது. இதன் கீழ் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் வெற்றிட கன்றுகளை நடுவதற்காக இறப்பர் கன்றுகளை இலவசமாக வழங்குதல், முதிர்ச்சியடையாத இறப்பர் பயிருள்ள காணிகளில் ஊடுபயிர்களாக வாழை, அன்னாசி, கொடித்தோடை முதலானவற்றை பயிரிடுவதற்காக இலவசமாக கன்றுகளை விநியோகித்தல், அறுவடை உதவியாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கு 50% மானிய அடிப்படையில் பால் வெட்டும் கத்திகளைப பெற்றுக் கொடுத்தல் மற்றும் திணைக்களத்துக்குரிய இறப்பர் நாற்றுமேடைகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்காக நிவாரணம் வழங்குதல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வெற்றிடங்களை நிரப்புவதற்காக இறப்பர் கன்று விநியோகம் இவ் ஆண்டில் பாரம்பரியமற்ற பிரதேசங்களில் மொணராகலை, அம்பாறை, அம்பாந்தோட்டை, வவுனியா, பதுளை ஆகிய மாவட்டங்கள் உள்ளடங்களாக இறப்பர் பயிரிடப்பட்ட அனைத்து மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டதோடு, ஊடுபயிர் பயிரிடல் நிகழ்ச்சித்திட்டம் மற்றம் பால்வெட்டும் கத்தி விநியோகித்தல் நிகழ்ச்சித்திட்டம் இறப்பர் பயிரிடும் அனைத்து பிரதேசங்கள் உள்ளடங்களாக அமுல்படுத்தப்பட்டது. திணைக்களத்திடமுள்ள 7 இறப்பர் நாற்றுமேடைகள் 5 மாவட்டங்களில் காணப்படுவதோடு அவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இவ்வருடத்தில் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. இது வாழ்வெழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதல்முறையாக இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது. தற்போது இதன் பெறுபேறாக உயர்தரத்தையுடைய இறப்பர்க் கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந் நிகழ்ச்சித்திட்டமானது பின்னூட்டலாகின்றது. வாழ்வெழுற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இவ்வருடத்தில் 12.53 மில்லியன் ரூபாய் தொகை இத்திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்ததோடு அதன் முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

## வாழ்வெழுற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி, பௌதிக முன்னேற்றம்

| நிகழ்ச்சித்திட்டம் | நிதி முன்னேற்றம் | | | பௌதீக முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மில்.ரூபா. | செலவு மில்.ரூபா. | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மில்.ரூபா. | செலவு மில்.ரூபா. | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மில்.ரூபா. | % |
| வெற்றிடங்களில் நடுவதற்கான இறப்பர் கன்று விநியோகம் (கன்று) | 6.00 | 7.86 | 131 | 100,000 | 130,955 | 131 |
| ஊடு பயிர் செய்கை (கன்று) | 2.1 | 1.73 | 82 | 46,200 | 63,438 | 137 |
| பால் வெட்டும் கத்திகள் விநியோகம் ( கத்தி எண்ணிக்கை) | 0.93 | 0.87 | 93 | 3,230 | 3,027 | 94 |
| அரச நாற்றுமேடைகள் அபிவிருத்தி நடவடிக்கை | 3.50 | 2.07 | 59 | 7 | | |
| 2014 மொத்தம் | 12.53 | 12.53 | 100 | - | - | - |

**புள்ளிவிபர அட்டவணை XXX**

## 3.19. இணைந்த நிதியம்

| செலவு விடயம் | மொத்த ஒதுக்கீடு கிடைப்பனவு மி. ரூபா | தேறிய செலவு மில். ரூபா |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம** | | |
| தனிநபர் வேதனம் | 178.10 | 170.01 |
| போக்குவரத்துச்செலவு | 10.00 | 9.79 |
| வழங்குதல் | 4.90 | 4.25 |
| பராமரிப்புச்செலவு | 6.04 | 5.91 |
| சேவை | 17.51 | 17.21 |
| எரிபொருள் | 4.65 | 4.35 |
| மாற்றல் (பங்களிப்பு தொகை, சொத்துக்கடன் வட்டி) | 8.10 | 7.99 |
| **மொத்தம்** | **229.3** | **219.51** |
| **மூலதனச்செலவு** | | |
| மூலதன சொத்து புனருத்தாரணம் மற்றும் அபிவிருத்தி செய்தல் | 31.70 | 27.02 |
| மூலதன சொத்தை எடுத்துக் கொள்ளுதல் | 2.80 | 2.12 |
| அபிவிருத்தி நிவாரணம் | 787.00 | 786.36 |
| முயற்சி மேம்பாடு | 1.00 | 0.50 |
| ஏனைய மூலதன முதலீடு (2502) | 47.00 | 36.06 |
| **மொத்தம்** | **869** | **852.06** |
| **முழு மொத்தம்** | **1098.80** | **1071.57** |

**புள்ளிவிபர அட்டவணை xxxi**

## 3.20. செஸ் வரி தொடர்பான நடவடிக்கை

### (1) பதிவு

| | |
|---|---|
| பதிவு செய்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | 144 |
| செலுத்த வெண்டிய மொத்தக கம்பனிகள் எண்ணிக்கை | 54 |
| செஸ் செலுத்தும் கம்பனிகளின் எண்ணிக்கை | 55 |

**உள்நாட்டு நுகர்விற்கு ஏற்ப அறவிடப்பட்ட செஸ் வரி**

| குறித்த மாதம் | வருமானம் (உள்நாட்டு நுகர்வுக்கு ஏற்ப) ரூபா |
|---|---|
| ஜனவரி | 31.90 |
| பெப்ரவரி | 18.70 |
| மார்ச் | 16.80 |
| ஏப்ரல் | 16.10 |
| மே | 10.20 |
| ஜுன் | 23.50 |
| ஜுலை | 13.60 |
| ஆகஸ்ட் | 23.50 |
| செப்டம்பர் | 18.63 |
| ஒக்டோபர் | 13.10 |
| நவம்பர் | 14.74 |
| திசெம்பர் | 28.86 |
| **மொத்தம்** | **229.63** |

**செஸ் வரி புள்ளிவிபர அட்டவணை -xxxii**

இறப்பர் இறக்குமதி மற்றும் எற்றுமதி அடிப்படையில் அறவிடப்பட்ட செஸ் வரி தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

**இறக்குமதி, ஏற்றுமதி அடிப்படையில் செஸ்வரி -2014**

| குறித்த மாதம் | இறக்குமதியின் அடிப்படையில் ரூ.மில் | ஏற்றுமதிமதியின் அடிப்படையில் ரூ.மில். |
|---|---|---|
| ஜனவரி | 118.20 | 50.90 |
| பெப்ரவரி | 105.80 | 36.80 |
| மார்ச் | 134.20 | 31.00 |
| ஏப்ரல் | 122.00 | 26.10 |
| மே | 144.40 | 19.00 |
| ஜுன் | 119.70 | 20.90 |
| ஜுலை | 127.80 | 17.60 |
| ஆகஸ்ட் | 137.10 | 19.90 |
| செப்டம்பர் | 162.60 | 17.50 |
| ஒக்டோபர் | 185.60 | 18.30 |
| நவம்பர் | 159.90 | 15.10 |
| டிசெம்பர் | 180.70 | 20.70 |
| **மொத்தம்** | **1,698.00** | **293.80** |

**செஸ் வரிபுள்ளிவிபர அட்டவணை xxxiii**

## 3.21. மீள் பயிரிடலுக்கான ஆலோசனை சபை

1953 ஆம் ஆண்டின் 36 ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள்பயிரிடல் நிவாரண உதவி சட்டத்தின் 10 வது பிரிவு மற்றும் 1956 ஆம் ஆண்டின் 11 ம் இலக்கம் கொண்ட இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 40 மற்றும் 41 ஆகிய பிரிவுகளுக்கு ஏற்ப இச்சபை நிறுவப்பட்டுள்ளது.

இச்சபை இறப்பர் மீள்பயிரிடல் மாணிய சட்டம் தொடர்பாக சுட்டிக்காட்டப்படும் விடயங்கள் தொடர்பாக கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சருக்கு ஆலோசனையை பெற்றுக் கொடுத்தல் மற்றும் இறப்பர் மீள் பயிரிடலுக்கான மாணிய உதவி முறைமையை நிர்வாகம் செய்யும் பொருட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனைகளை பெற்றுக் கொடுத்தல் என்பன இவ் ஆலோசனை சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் தலைவர் அதிகார பூர்வமாக இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாவார். ஏனைய அங்கத்தவர்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் நியமிக்கப்படுவர்.

## 3.22. உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள்

- உள்ளகக் கணக்காய்வு விசாரணை - களுத்துறை பிரதேச அலுவலகம்
- களஞ்சிய பொருட் பரிசோதனை - கொழும்பு தலைமை அலுவலகம்
- கொடுப்பனவுச் சிட்டை பரிசீலித்தல் - கொழும்பு தலைமை அலுவலகம்
- மொணராகலை இறப்பர் அபிவிருத்தி பிரதிப் பணிப்பாளரின் முறைகேடுகள் தொடர்பிலான ஆரம்ப விசாரணை மேற்கொள்ளுதல்
- உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை - கறிவேப்பிலை இறப்பர் நாற்றுப்பண்ணை
- திணைக்களத்தினால் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் புதிய நிர்மாணிப்புகள் மற்றும் திருத்தங்களுக்குரிய பொருட்களைப் பொருட்பதிவேட்டில் சேர்க்காதிருத்தல்.
- தலைமை அலுவலகத்தின் பிரச்சாரப் பிரிவுக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் முறைப்படி பொருட்பதிவேட்டில் சேர்க்காதிருத்தல்
- கொடுப்பனவுச் சிட்டைகளைப் பரிசீலித்தல் - கொழும்பு தலைமை அலுவலகம்
- விடுமுறை மற்றும் வருகையைப் பரிசீலித்தல் - கொழும்பு தலைமை அலுவலகம்
- தலைமையகத்திலும் பிரதேச அலுவலகங்களிலும் வங்கி இணக்கக்கூற்றுக்களைப் பரிசீலித்தல்
- 2014 ஆம் ஆண்டின் செலவு மதிப்பீட்டைப் பரிசீலித்தல் - கொழும்பு தலைமை அலுவலகம்
- கொள்வனவு மற்றும் களஞ்சியப் பதிவேடுகள் பரிசீலித்தல் - கொழும்பு தலைமை அலுவலகம்
- கொடுப்பனவுச் சிட்டைகளைப் பரிசீலித்தல் - கொழும்பு தலைமை அலுவலகம்
- வாகனங்களின் நாளாந்த ஓட்டப் பதிவுகளைப் பரிசீலித்தல் - கொழும்பு தலைமை அலுவலகம்

## 3.23. பிரச்சாரப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பணிகள்

- தெயட்ட கிருள்ள தேசிய அபிவிருத்தி கண்காட்சிக்காக காட்சிக்கூடம் குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரியில் 07 நாட்கள் நடத்தியமை
- தேசிய விவசாய வாரத்துக்காக மாத்தறை தெலிஜ்ஜவெல விவசாயக் கல்லூரியில் கண்காட்சிக்கூடம் 10 நாட்கள் நடாத்தப்பட்டமை
- சப்ரகமுவ மாகாணசபையால் அபிவிருத்தி செய்யப்பட்ட தருணோதய கண்காட்சியில் இரண்டு நாட்கள் கண்காட்சி நடாத்தியமை.
- இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் அலுவல்களுக்காக ஒரு நாள் கருத்தரங்கு இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் அகலவத்த அலுவலகத்தில் நடாத்த ஏற்பாடு செய்தல்.
- மழைக்கவசம் போடுதல் தொடர்பில் விவசாயகளைத் தெளிவுபடுத்துவதற்காக பிரச்சாரரீதியான நிகழ்ச்சிகள் நடாத்தியமை.
- தொழில்வாண்மை மட்டத்தில் பால் வெட்டும் நிபுணர் பயிற்சிகள் 11 நடாத்த நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதன் ஆரம்ப மற்றும் இறுதி நாட்களில் பங்குபற்றித் தேவையாக ஒத்துழைப்பு வழங்கியமை.
- சாதாரண பால் வெட்டும் நிபுணத்துவப் பயிற்சிகள் 145 நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தல்.
- 7 நாற்று ஒட்டுபவர்களுக்கான பயிற்சிகள் நடாத்த ஏற்பாடு செய்தல்.
- இறப்பர் அபிவிருத்தி அலுவலர்களுக்கு சேவைத்தொகுப்பு பாடநெறிகள் நடாத்தியமை.
- இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் இறப்பர் பயிரின் அபிவிருத்தியை வெளிக்காட்டுவதற்காகக் காணொளி திரைப்படத்தைத் தயாரிக்க ஒத்துழைப்பு வழங்கியமை.
- விவசாயத் திணைக்களத்தின் விவசாய வானொலிச் சேவையுடன் இறப்பர் கைத்தொழிலின் அபிவிருத்திக்காக ஆலோசனை நிகிழ்ச்சியில் அனைத்து வாரங்களும் பங்குபற்றல். 30 காட்சிப்பலகைகள் மும்மொழிகளிலும் தயாரித்தமை.

## 3.24. கணனிப் பிரிவினால் நிறைவேற்றப்படும் பணிகள்

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் இறப்பர் பயிர் மானியம் செலுத்துதல், நாற்றுப் பண்ணைகள் தொடர்பான விபரங்கள் மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரங்களுக்குரிய தகவல் முகாமைத்துவத்துக்காக பொருத்தமானவாறு மேம்படுத்தப்பட்ட கணனி மென்பொருளை உருவாக்கும் கருத்திட்டம், தகவல் மற்றும் தொடர்பாடல்,தொழில்நுட்ப முகவரகத்தின் ஆலோசனையில் ஆரம்பிக்கப்பட்டது.

அக்கருத்திட்டம் இரண்டு கட்டங்களைக் கொண்டதாகும். முதலாவது கட்டமான கட்டமைப்பு ஆய்வு தெரிவு செய்யப்பட்ட ஆலோகரால் மேற்கொள்ளப்பட்டு தற்போது முடிவடைந்துள்ளது. இதன் இரண்டாவது கட்டத்தில் மென்பொருளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட உள்ளது.

- பிரதேச அலுவலகங்களில் அமுல்படுத்தப்படும் மானியக் கொடுப்பனவின் கணனி நிகழ்ச்சித்திட்டங்களில் பிரச்சினைகளைத் தீர்த்து, அலுவலர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குதல்.


- திணைக்கள இறப்பர் விலைகள் குறுஞ்செய்தி (SMS) ஊடாக வழங்கும் கருத்திட்டத்தை ICTA நிறுவன ஆலோசனைக்கமைய அமுல்படுத்துதல்.

- திணைக்கள இணையத்தளத்தின் இறப்பர் விலைகளை இற்றைப்படுத்தி பேணிச்செல்லுதல் மற்றும் எதிர்காலத்தில் நவீனமயப்படுத்தப்பட்ட இணையத்தளத்தை உருவாக்கும் நடவடிக்கைகளுக்காக ICTA நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுத்துதல்.

# 4. பிரதேச அலுவலக முன்னேற்றம்


நாட்டில் இறப்பர் பயிரிடப்படும் 14 மாவட்டங்களில் சேவை வழங்குவதற்காக 5 பிராந்திய அலுவலகங்களை அமைத்துள்ளதோடு 2014 ஆம் ஆண்டில் அவ்வலுவலகங்களில் பெறப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு.

## 4.1. இறப்பர் புதிய பயிரிடல் முன்னேற்றம்





அம்பாறை மாவட்டத்தின் பயிரிடல் இலக்காக 3000 ஹெக்டேயர் ஆகும். வன பாதுகாப்பு திணைக்களத்தின், மஹாவலி காணி சரி செய்வதற்கு முடியாமையால் வழங்கப்பட்ட இலக்கை அடைவதற்கு முடியாது போனது.


## 4.2 இறப்பர் மீள் பயிர்ச்செய்கை முன்னேற்றம்




## 4.3 ஊடுபயிர்ச்செய்கை முன்னேற்றம்





## 4.4 மழைக்காப்பு இடுதல்




### 4.5 பால் வெட்டுவோருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்




### 4.6 பால் வெட்டுவோருக்கான தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்



## 4.7 ஒட்டு வைப்போருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்








**பிரதேச செயலகத்தின் மூலம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்**

## 5. ஏனைய நிறுவன சேவைகளை நிறைவேற்றுதல்.

கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் பிரகாரம் வருடத்தில் பின்வரும் நிறுவனங்களில் பணிப்பாளர் சபை அங்கத்துவத்தை ஏற்று பணிக்கப்பட்ட கடமைகள் நிறைவேற்றப்பட்டன.

1) இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை
2) துருசவிய நிதியம்
3) இலங்கை இறப்பர் உற்பத்தி, ஏற்றுமதி கூட்டுத்தாபனம்
4) தோட்ட காணி துண்டாடலை கட்டுப்படுத்தும் சபை

பணிப்பாளர் சபைக்கூட்ட தவணைகளில் பங்குபற்றுதல், கருத்து மற்றும் ஆலோசனைமுன்வைத்தல் தீர்மானத்திற்காக உதவி வழங்குதல், தேவையான இணக்கப்பாடும் அதிகாரமும் வழங்குதல், நடவடிக்கைளை விசாரணை செய்தல், அந் நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்களிப்பு வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் இதன் மூலம் நிறைவேற்றப்படும்.

இதற்கு மேலதிகமாக திணைக்கள சேவைகள் தேவையான சகல அமைச்சு திணைக்கள, ஏனைய அரச நிறுவனங்கள், தனியார் நிறுவன தனிநபருக்கு அவர்கள் கோரும் சேவைகள்,தகவல் மற்றும் உதவிகள் குறைவின்றி பெற்றுத்தரப்படும். பாடசாலைக் கண்காட்சி உதவி,விரிவுரை மற்றம் தகவல் உதவி. நிறுவனங்களுக்கு மற்றும் தனிநபருக்குத் தேவையான குறியீட்டு தகவல் மற்றும் விளக்கமளித்தல், ஆலோசனைப் போன்றவற்றைப் பெற்றுக்கொடுத்தலும் இதற்குள்ளடங்கும்.

இச்சேவைகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல் தலைமை அலுவலகத்திலும் ˙ பிரதேச செயலகத்திலும் துறைசார் அதிகாரியினதும் நாற்றுமேடை முகாமையாளரதும் துணையுடன் இடம்பெறுகின்றன.

මගේ අංකය / எனது இல. / My No.: எல்பீ/ஜே/ஆர்சீஎப்/எப்ஏ/2014/01

ඔබේ අංකය / உமது இல. / Your No.:

දිනය / திகதி / Date: 2015 யூன் 19

பணிப்பாளர் நாயகம்,

இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

**இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1957 இன் 45 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1956 இன் 11 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு அதிகாரச்சட்டத்தின் (436 ஆவது அத்தியாயம்) 39 (அ) (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.


අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் மற்றும் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

---

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 1,864,559 தொகை இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்திலிருந்து கழித்துக் காட்டுவதற்கு பதிலாக அது நடைமுறைச் சொத்தொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 985,925 | இச்சொத்துக்கள் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பாவனைக்காக 17 வருடங்களுக்கு முன் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்களின் பதிவேடொன்றோ அல்லது பௌதீக ரீதியில் காணப்படுகின்றமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நடைமுறைச் சொத்துக்கள் | 635,272 | (i) | பல்வேறு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 287,378 தொகையான முற்பணம் 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாது காணப்பட்டதுடன் அதனை அறவிடவேண்டிய தரப்பினரின் விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | | (ii) | ஒரே முகாமைத்துவத்தின் கீழ் காணப்பட்ட இறப்பர் மீள் பயிரிடும் நிதியத்திலிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 210,010 தொகையினை அறவிட்டு தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | | (iii) | பல்வேறு நிறுவனங்களிலிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 137,884 தொகையான மீதி உள்ளபடியாகக் கிடைக்கவேண்டியதாகக் காணப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்கான எதுவித சான்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நடைமுறைப் பொறுப்புக்கள் | 239,784 | (i) | கடப்பாடு ஏற்பட்டமைக்கான காரணம் வெளிப்படுத்தப்படாத ரூபா 222,031 தொகையான செலுத்தவேண்டிய முற்பணம் 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாத மீதியாகக் காணப்பட்டதுடன் அதனை செலுத்தவேண்டிய தரப்பினரின் விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 5,448 தொகையான பொது வைப்புக்களுக்குரிய எவ்வித பதிவேடும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தபால் திணைக்களத்துடன் தகவல்களை பரிமாறிக்கொள்வதன் மூலம் இலகுவாக தீர்க்க முடியுமாக இருந்த அட்டுறு முத்திரை மற்றும் மின் சமிக்ஞை கட்டணங்கள் ரூபா 10,689 தொகை 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(iv) கிடைக்கவேண்டிய தரப்பினர் தொடர்பான தகவல்கள் எதுவுமின்றி 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள அட்டுறு செலவினம் ரூபா 1,616 தொகையை ஏடுகளிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியத்திற்குரிய நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புக்களுக்காக வட்டி வருமானம் கிடைத்திருந்ததுடன் அது நிதியத்தின் ஒரே வருமான மூலமாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 10,961,943 தொகைக்குரிய 02 நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 3,599,113 தொகையான சேமிப்பு வைப்புக்கள் மீளப் பெறப்பட்டு ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்டமையால் தொடர்ந்தும் நிதியத்தின் செயற்பாடுகள் செயற்பாடின்றிக் காணப்பட்டது. அதன் படி மீளாய்வாண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கும் காசுப்பாய்ச்சல் கூற்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 3.2.1 நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பான நிகழ்கால நிலைமை

தற்போது செயற்பாட்டில் இல்லாத இறப்பர் கட்டுப்பாட்டு நிதியம் 06 மாத காலத்தில் கலைத்தல் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததாக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2014 யூலை 04 ஆந் திகதிய ஆர்டீடீ/02/10/கலைத்தல்(நெ.வ) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 01 ஆந் திகதி மீதியைத் தீர்ப்பனவு செய்யும் குழு நியமிக்கப்பட்டிருந்தது. அக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் நிதியத்திற்குச் சொந்தமாக இருந்த சேமிப்பு வைப்பு மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளின் மீதி ஒன்றிணைந்த நிதியத்திற்கு மாற்றுதல் மாத்திரம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் எஞ்சிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. எல்பீ/ஜே/ஆர்ஆர்எஸ்எப்/எப்ஏ/2014/01

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2015 யூலை 15

பணிப்பாளர் நாயகம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

**இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1953 இன் 36 ஆம் இலக்க இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதிய அதிகாரச்சட்டத்தின் (437 ஆவது அதிகாரம்) 6(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 70,659,527 தொகையினை இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியத்திலிருந்து கழித்துக் காண்பிப்பதற்குப் பதிலாக அது நடைமுறைச் சொத்தாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டு வரை கணக்காய்வுக் கட்டண பட்டியல்களைத் தீர்க்கப்பட்டிருந்த போதும் நிதியத்தால் முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வுக் கட்டணமாக ரூபா 1,181,126 தொகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் ஆண்டொன்றிற்கு ரூபா 40,000 வீதம் 2011 முதல் 2014 வரையான நான்கு ஆண்டுகளுக்காக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த ஏற்பாடு ரூபா 160,000 ஆக இருந்த போதிலும், ரூபா 1,021,126 தொகை கூடுதலாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | 17,766,770 | இச் சொத்துக்கள் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக 17 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பௌதீக ரீதியாக காணப்பட்டமைக்கான சான்றொன்று சமர்ப்பிக்கப்படவில்லை |
| (ஆ) | நடைமுறைச் சொத்துக்கள் | 102,158,631 | (i) வெவ்வேறு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த 17 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்துவரும் ரூபா 15,220,514 கூட்டுத் தொகையான 12 முற்பண கணக்கு மீதிகள் தொடர்பாக போதியளவு தகவல்கள் மற்றும் அவை அறவிடப்பட வேண்டிய தரப்பினரின் விபரங்கள் கணக்காய்விற்குச் |

சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பொதுத் திறைசேரியிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 17,066,956 தொகை, சுங்க திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 286,059 தொகை மற்றும் தரைப்படையிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,260 தொகை என்பவற்றை குறித்த நிறுவனங்களிடம் விசாரிக்காமல் 17 ஆண்டுகளாக நடைமுறைச் சொத்துக்களாக முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன், அம்மீதிகள் உள்ளவாறாக கிடைக்க வேண்டியதாக இருப்பதை உறுதிப்படுத்து வதற்குரிய எதுவித சான்றொன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

(iii) முதலீடு செய்யப்பட்ட பணம் மற்றும் வட்டித் தொகை என்பன மீளாய்வாண்டின் போது மீளப்பெறப்பட்டு திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், 17 ஆண்டுகளாக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 102,890 தொகையான பெற வேண்டிய முதலீட்டு வட்டி தீர்வு செய்யப்பட்டமைக்கான கணக்காய்விற்குச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கூட்டுத் தயாரிப்பு நிலையத்திற்கான பெறுவனவுகள் மற்றும் செயற்திட்ட இலக்கம் 02 என்ற இரண்டு கணக்குகளுக்குரிய முறையே ரூபா 3,647,219 தொகையும் ரூபா 65,477,579 ஆன மீதிகள் தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| | | (v) 17 ஆண்டுகளாக பெறவேண்டிய பணமாக முன்கொண்டு வரப்படும் ரூபா 1,800 ஆன தபால் கட்டுநிதியைப் பெற்றுக்கொண்ட நபர் குறிப்பாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. |
| | | (vi) 17 ஆண்டு காலமாக நடைமுறைச் சொத்தாக முன்கொண்டு வரப்படுகின்ற அறவீடுகள் முழுமையாக நிச்சயமற்றதாக இருந்த ரூபா 351,353 தொகையான 05 கணக்குகளின் மீதியை சொத்தொன்றாக இனங்காணப்பட்டமைக்கு காரணங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 18,868,119 | (i) 17 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 9,988,530 ஆன நானாவித வைப்புக்களுக்குரிய ஏடுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) திரட்டு நிதியத்தின் முற்பணங்களாக பெயரிடப்பட்ட ரூபா 483 ஆன செயல்முறையற்ற மீதியொன்று 17 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டு வருவது தொடர்பாக கணக்காய்விற்குச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | | (iii) பெற வேண்டிய தரப்பினர் தொடர்பாக தகவல்கள் எதுவும் இல்லாத 17 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மாற்றமுராது நிலவி வரும் மருத்துவ உதவிக் கடன் ரூபா 57,526 தொகையும் |

ஏனைய திணைக்களக் கடன் ரூபா 416,313 தொகையை பதிவேடுகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஒரே முகாமைத்துவத்தின் கீழ் காணப்பட்ட போதும் இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 281,210 தொகை மற்றும் இறப்பர் அபிவிருத்தி திணைக்கள கடன் ரூபா 15,449 தொகையை கொடுத்து தீர்ப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) செலுத்த வேண்டிய குறிப்பான தரப்பினர் மற்றும் பெறுமதி என்பன இனங்காணப்பட்டிருந்த போதிலும், ரூபா 22,087 தொகை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்திற்கு செலுத்தி தீர்வு செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடைமுறைகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை

(vi) 17 ஆண்டுகளுக்கு முன்னிருந்து எந்தவொரு ஊழியரையும் சேவையில் ஈடுபடுத்தப்படாமல் இருந்த போதிலும், செலுத்த வேண்டிய நிச்சயிக்கப்பட்ட தரப்பினர் குறிப்பிடப்படாத ரூபா 90,706 தொகையான ஊழியர் பணிக்கொடை பொறுப்பொன்று நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டமை கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(vii) நாற்றுக்கள் முற்பணம் மற்றும் பயிர்ச்செய்கைக்கு பசளை என்ற பெயரில் பெயரிடப்பட்ட முறையே ரூபா 119,550 தொகை மற்றும் ரூபா 4,779,564 ஆகிய இரண்டு மீதிகள் 17 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் முன்கொண்டு வரப்படுவதுடன், அவற்றிற்குரிய பதிவேடுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) நிதியத்திற்குரித்தல்லாத கடன் பெறுவனவாக குறிப்பிடப்பட்ட ரூபா 3,096,701 ஆன நடைமுறைப் பொறுப்பொன்றாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அசாதாரண கடப்பாடு ஏற்பட்டமைக்காக காரணங்களோ அல்லது அப்பணம் செலுத்தப்பட வேண்டிய தரப்பினர் யார் என்பது தொடர்பாக கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திற்குரிய நிலையான வைப்புக்களுக்காக ரூபா 497,051 ஆன வட்டி வருமானமொன்று கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அது நிதியத்தின் ஒரே வருமான மார்க்கமாக இருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,307,910 தொகையான நிலையான வைப்புக்கள் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டு திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் தொடந்தும் நிதியத்தின் செயற்பாட்டு செயற்பாடொன்றும் காணப்படவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக வருமானச் செலவினக் கணக்கு மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான தற்போதைய நிலைமை

இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியம் தற்போது செயற்படுகின்ற நிலையில் இல்லாததால் ஓராண்டு காலப்பகுதியில் நிதியத்தைக் கலைக்கும் நடவடிக்கைககளைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்ப்பதாக இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2014 யூலை 04 ஆந் திகதிய ஆர்டீடீ/02/10/கலை(ந.வெ) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பெருந்தோட்டத்துறை அமைச்சின் செயலாளருக்கு தெரியப்படுத்தியிருந்ததுடன், 2014 திசெம்பர் 01 ஆந் திகதி மீதிகளைத் தீர்வு செய்யும் குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது. அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிதியத்திற்குரிய நிலையான சொத்துக்கள் மற்றும் முதலீட்டுக் கணக்குகளிலுள்ள மீதிகள் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு கையளித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், எஞ்சிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைத் தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துகள்
(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)